
விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 07 சனிக்கிழமை (20.04.2002) தொலைபேசி 3378 ஒலி 122

நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்
தங்க நகைகளுக்கு
மதுரா ஜுவல்லரி
177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



அன்னை பூபதியின் 14வது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நல்லூரில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம், படத்தில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழினி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதி மக்களையும் காணலாம்.

### ஐ.தே.முன்னணி அரசு எடுக்கும்

# சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்குவேன்

## நோர்வேக் குழுவிடம் ஜனாதிபதி உறுதி



(நமது நிருபர்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னேற்றகரமாக எடுத்துச் செல்வதற்கு அரப்பணிப்புடன் செயற்பட்டு முழு அளவிலான ஒத்துழைப்பை வழங்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியைச் சந்தித்து தற்போ போது:-

## கொழும்பு சென்ற பஸ்கள் முகமாலையுடன் திரும்பின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குச் செல்வதற்கான நேரடி பஸ் சேவை நேற்று இடம்பெறவில்லை.

யாழிலிருந்து நேற்றுக் காலை 7 பஸ்வண்டிகள் கொழும்பு செல்

ணத்தைத் தொடர புலிகள் அனுமதி வழங்கவில்லை.

அரசினால் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பிற்கான இந்நேரடி பஸ் சேவை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு எவ்வித தகவலும் தெரியப்படுத் தாத



நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தலைமையிலான தூதுக்குழுவினர் நேற்று

துழைப்பை வழங்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியைச் சந்தித்து தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

அங்கு ஜனாதிபதி தொடர்ந்து தூதுக்குழுவினருடன் கருத்துப் பரிமாறும் போது:-

இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கும், தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னேற்றம் அடைவதற்கும், முழு அர்ப்பணிப்புடன்

(10ம் பக்கம் பார்க்க)

சேவை நேற்று இடம்பெறவில்லை.

யாழிலிருந்து நேற்றுக் காலை 7 பஸ்வண்டிகள் கொழும்பு செல்வதற்காக முகமாலை நோக்கிச் சென்றபோதும் பஸ் வண்டிகள் பய

பாக விடுதலைப் புலிகளுக்கு எவ்வித தகவலும் தெரியப்படுத் தாத காரணத்தாலேயே புலிகளால் பஸ்

(10ம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனை நாடுகடத்தும் அவசியம் இன்னமும் ஏற்படவில்லை

## தமிழக சட்டசபை தீர்மானத்திற்கு விளக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடுகடத்தும் அவசியம் இன்னமும் ஏற்படவில்லை என்று சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பில், தலைவர் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இலங்கை அரசைக் கோருவது என தமிழக சட்டசபைத் தீர்மானம் தொடர்பாகவே சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது. இதேவேளை இந்திய அரசு இன்னமும் உத்தியோகபூர்வமாக இது தொடர்பாக இலங்கை அரசைக் கோரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிப்பு

## பெருந்திரளான மக்கள் நல்லூரில் கூடினர்

(நல்லூர்)

தியாகச் சுடர் அன்னை பூபதியின் 14வது ஆண்டு நினைவு தின அஞ்சலி நிகழ்வு நேற்று நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவசீலன் தலைமையில் மாலை 5.00 மணிக்கு அஞ்சலி நிகழ்வு ஆரம்பமாகியது.

1988ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராக தமிழர் உரிமையை வலியுறுத்தி மட்டக்களப்பில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னைக்கு அஞ்சலி செலுத்த குடா நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருந்திரளான மக்கள் நல்லூரில் நிறைந்திருந்தனர்.

அன்னையின் உருவப் படத்திற்கு மாவீரர் ஒருவரின் தாயார், மற்றும் விடுதலைப் புலிப் போராளிகள் விளக்கேற்றி மலர் மாலை அணிவித்து தமது இதய அஞ்சலியை செலுத்தினர்.

தொடர்ந்து திரண்ட மக்கள் கூட்டமும் தமது அஞ்சலியை செலுத்தியது.

தமிழீழ விடுதலைப் புலிப் போரராளிகள், மதகுருமார், மனித நேய அமைப்புக்களின் பிரதி நிதிகள், கூட்டுறவுத் துறையினர், பல்கலைக் கழக, தொழிநுட்பக் கல்லூரி, பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என திரண்டிருந்த மக்கள்

(10ம் பக்கம் பார்க்க)

# தீவக மக்கள் ஒன்றிணைந்து நெடுந்தீவில் பொங்கு தமிழ்

(நெடுந்தீவு)

தமிழ் மக்களின் அபிலாசைகளான மரபு வழித்தாயகம், சுய நிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பவற்றை வலியுறுத்தி நேற்று நெடுந்தீவில் மாபெரும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நெடுந்தீவு மாவலித்துறையில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு திரண்ட தீவக மக்கள் அங்கிருந்து எழுச்சியுடன் பதாகைகள், கொடிகளைத் தாங்கியவாறு ஊர்வலமாக நெடுந்தீவு பிரதேச சபைக்கு அருகில் உள்ள தியாகிகளின் நினைவாலயத்தை சென்றடைந்தனர்.

அங்கு மாவீரர் விபுலனின் தாயார் திரேசம்மா ஈகச் சுடரை ஏற்றி வைக்க பொங்கு தமிழ் எழுச்சிக் கொடியை மாவீரர் வர்ப்பிரகாசத்தின் தாயார் திருமதி.

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 6இல் இருந்து 11 வரையான பாடங்கள் சிறந்த ஆசிரியர்கள் மூலம் வகுப்பில் 15மாணவர்கள் மட்டும். மாணவர்கள் பதிவுக்கு தலைமை ஆசிரியர் 426(302) காங்கேசன்துறை வீதி,யாழ்ப்பாணம்.

(4981)


# மருதங்கேணி

## கூ. ச. கிளை மீள இயங்குகிறது

(மந்திகை)

சூரியகதிர் இராணுவ நடவடிக்கையை அடுத்து இடம் பெயர்ந்து வன்னி பெருநிலப் பரப்பில் இயங்கி வந்தமருதங் கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்துள்ளதை அடுத்து இச்சங்கம் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (உ- 23)

# மரங்கள் தறிக்கத் தடை

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலுள்ள சவுக்கு மற்றும் ஏனைய மரங்களைத் தறிப்பதற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச சூழல் பாதுகாப்புக்குழு தடை விதித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் மரங்கள் தறிப்பதனால் இயற்கைச்சூழல் பாதிக்கப்படுவதை அடுத்து இத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மரங்கள் தறிப்பதைக் கட்டுப்படுத்தவும் அவற்றைக் கண்காணிக்கவும் சூழல் பாதுகாப்புக்குழு கண்காணிப்பாளர்களை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-23)

## பொன் விழா மலர் இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்தி சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், மற்றும் பாலர் பாடசாலை ஆகியவற்றின் பொன்விழா மலர் வெளியீடு இன்று சனசமூக நிலைய மண்டபத்தில் மாலை 4மணிக்கு நிலையத் தலைவர் கோ. நரேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் என். வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நூலின் முதற் பிரதியை யாழ். போதனா வைத்திய சாலை கண்வைத்திய நிபுணர் எஸ். குகதாசன் பெற்றுக் கொள்வார். (இ)

# வீரசிங்கம் மண்டபத்தில் வல்லமைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்).

கோப்பாயிலும், வட்டுக் கோட்டையிலும்,இறை அருளால் வெற்றிகரமாக இடம் பெற்ற வல்லமைப் பெருவிழா நேற்று முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகிறது.

நேற்றைய நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய போதகர் சங்கை அல்பேட் ஜெப நாயகம் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில்,

எங்கள் கூட்டங்களின் நோக்கம் மதமாற்றம் அல்ல மனமாற்றமே.

ஆண்டவர் மனிதன் கட்டிய ஆலயங்களில் அல்லது,தான் சிருஷ்டித்த மனிதரின் உள்ளங்களிலேயே வாழ விரும்புகிறார்.

இயேசு நாதர் கிறிஸ்தவர்களை மட்டுமல்ல இந்துக்களையும்நேசிக்கிறார். ஆகவே தான் அவர் இந்த உலகத்திலே தோன்றி சகல மனிதர்களுடைய பாவங்களுக்காகவும் சிலுவையிலே மரித்தார் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, இன்றும் நாளையும் பி.ப. 4.00 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் தொடர்ந்தும் கூட்டங்கள் இடம்பெறும்.

காலை 9.00 மணிக்கு போதகர்கள், தலைவர்கள், ஊழியர்கள் முன்னேறும் விசுவாசிகளுக்கான கருத்தரங்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

# இந்திய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுலா

(கொழும்பு)

இந்திய 'ஏ' கிரிக்கெட் அணி ஒரு மாதகால சுற்றுலாவை மேற்கொண்டு மே மாதம் 9 ஆந் திகதிஇலங்கை வரவுள்ளது.

இவ் அணி இலங்கை 'ஏ' அணியுடன் மூன்று உத்தியோகப்பற்றற்ற டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று உத்தியோகப்பற்றற்ற ஒரு நாள் போட்டிகளிலும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அபிவிருத்தி அணியுடன் மூன்று நாள் பயிற்சி ஆட்டமொன்றிலும் பங்குபற்றவுள்ளது.

இத்தொடர் நடைபெறவுள்ள திகதி விபரம் வருமாறு,

மே 11-13 பயிற்சி ஆட்டம், மே 16-19 முதலாவது டெஸ்ட் போட்டி, மே 22-25 இரண்டாவது டெஸ்ட் போட்டி, மே 25-31 மூன்றாவது டெஸ்ட்போட்டி, ஜூன் 3 முதலாவது ஒரு நாள் ஆட்டம், ஜூன் 4 இரண்டாவது ஒரு நாள் ஆட்டம், ஜூன் 6 மூன்றாவது ஒருநாள் ஆட்டம்.

(உ-9)

## முக்கூட்டு வக்சீன் அனுப்பிவைப்பு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு ஒருதொகுதிமுக்கூட்டு வக்சீன் சுகாதார திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மூன்றுமாதகாலமாக முக்கூட்டு வக்சீனுக்கு அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவியமைகுறிப்பிடத்தக்கது (உ.23)

# எழுதுவினைஞர் நியமனக் கடிதங்களை கொழும்பில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவை எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் சேவைகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு நடைபெற்ற பரீட்சையின் பெறுபேற்றின்படி பின்வருவோர் நியமனக்கடிதங்களை பொறுப்பேற்பதற்காக ஏப்ரல் 25ஆம் திகதி மு. ப 10. 00 மணிக்கு கொழும்பு 7, சுதந்திர சதுக்கத்தில் அரச நிர்வாக அமைச்சில் கேட்போர் கூடத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

தங்களின் ஆள் அடையாளங்களை நிருபிப்பதற்கான அடையாள அட்டையை கொண்டு வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

★ பி. தினோதினி-புதுவீதி, காரைநகர்,

★ எஸ். நாகவதனா-37, 2 ஆம் ஒழுங்கை பலாலிவீதி, யாழ்ப்பாணம்,

★ என் ருசியந்தினி-கோப்பாய் தெற்கு,

★ எஸ் .-சுஜீவன் 14/ 2 அன்னசந்திரஒழுங்கை, கந்தர்மடம்,

★ சி. கவிதா கலட்டி ஒழுங்கை யாழ்ப்பாணம் இவர்களுக்குரிய அழைப்புகடிதங்கள் 22ம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் அரசஅதிபரிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# முஸ்லிம் குழுக்கள் ஜனாதிபதி, பிரதமரை சந்தித்துப்பேச விருப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேச வாய்ப்பு ஏற்படுத்தித் தருமாறு முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய முஸ்லிம் குழுக்கள் தன்னைக் கோரி வருவதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் பிரதிநிதியென்ற கருதலின் அடிப்படையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒப்பந்தம் செய்திருப்பதால் அதிருப்தியடைந்த முஸ்லிம் குழுக்களே இது தொடர்பாக கலந்துரையாட வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கேட்டு வருவதாக மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

### கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது

# பாஸ் முறையை பின்பற்ற படையினர் அறிவிப்பு

(மந்திகை)

சக்கோட்டைப் பகுதியில் கடலில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களை கடந்த வெள்ளி முதல் பாஸ் நடைமுறைகளை கையாளுமாறு படையினர் மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை அடுத்து ஏற்பட்ட சமாதான சூழலில் பாஸ் நடைமுறைகள ஏதுமின்றி மீனவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீனவர் சங்க பிரதிநிதிகளை அழைத்து பாஸ் நடைமுறைகளைகையாளுமாறுஅறிவுறுத்தியதுடன், கட்டுமரங்களை பாஸ்வழங்கும் காவலரணுக்கு அருகில் வைக்கப்பட்டு அதிலிருந்தே தொழிலுக்குச் செல்ல வேண்டுமென அறிவுறுத்தப்பட்டதாக மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

(உ. 23)

# அரசினர் பொது வைத்தியசாலை

## அறிவித்தல்

அரசினர் பொது வைத்திய சாலைக்கு பின்வருவோர் அமைய சுத்திகரிப்புத் தொழிலாழியாக நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்துள்ளவர்கள் அவர்கள் நியமனம் சம்மந்தமாக 22. 04- 02 அன்று காலை 10 .00மணியளவில் பணிப்பாளரைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

| பெயர் | விலாசம் |
|---|---|
| 1 செல்வி அந்தோனி ரட்சல | - இல 03, புதிய பாக் றோட் குருநகர் யாழ்ப்பாணம் |
| 2 வேணுகானம் மகாலிங்கம் | - பூனாறிலேன், கொக்குவில் மேற்கு கொக்குவில் |
| 3 பத்மநாதன் கஸ்தூரி | - பவர்கவுஸ்றோட் சுன்னாகம் தெற்கு சுன்னாகம் |
| 4 யகேந்திரன் சுகந்தினி | - இக்கிரானை கந்தரோடை சுன்னாகம் |
| 5 செல்வராசா மைதிலி | - சுன்னாகம் மேற்கு சுன்னாகம் |
| 6 கருவதி லோகநாயகம் | - கலைவாணி வீதி கோண்டாவில் வடக்கு கோண்டாவில் |
| 7 எஸ். மதிவதனி | - மாசியப்பிட்டி சண்டிலிப்பாய் |
| 8 ஞானபிரகாசம் தேவமலர் | - அம்மன்கோயிலடி கோப்பாய் மத்தி கோப்பாய் |
| 9 வைரவிப்பிள்ளை நவீனா | - ஊரெழு கிழக்கு சுன்னாகம் |
| 10 ஆர். கிருஸ்ணசுசி | - 258,2ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை |
| 11 கே. அற்புதராணி | - 220 2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் |
| 12 கே. கோமளச்செல்வி | -62/15 நெடுங்குளம் றோட் கொழும்பகம் |
| 13 நந்தகுமார் சசிகலா | - பத்திரகாளி கோவில் வீதி, பருத்தித்துறை |
| 14 இராஜரட்ணம் தவச்செல்வி | - தொல்புரம் கிழக்கு சுழிபுரம் |
| 15 கே. ரகுநாயகி | - தொல்புரம் மத்திசுழிபுரம் |
| 16 எஸ். ஜெகதீஸ்வரி | - 52ஆஸ்பத்திரிவீதி,யாழ்ப்பாணம் |
| 17 ஜேசுதாசன் கோமதி | - தொல்புரம் கிழக்கு சுழிபுரம் |
| 18 மரியாம்பிள்ளை லோறன்ஸ்தாஸ் | - 168 கோப்பாய் கொலனி திருநெல்வேலி |
| 19 கே.விஜிதராஜா | - 15/10 ஈச்சமோட்டை வீச்றோட் யாழ்ப்பாணம் |
| 20 செல்வராசா தவக்குமார் | - வட்டு தெற்கு முதலி கோவிலடி வட்டுக்கோட்டை |
| 21 எ. குணதீபன் | -கைதடி தெற்கு கைதடி |
| 22 பி. ஜெயசங்கர் | - 37, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணம் |
| 23 எ. எட்மன் கனேடி | - 28/2 ஆனந்தவடலி றோட் கொழும்பகம், யாழ்ப்பாணம் |
| 24 தியாகராசா யோகநாதன் | - வட்டு தெற்கு வட்டுக் கோட்டை |
| 25 நாகராசா குகதாசன் | - உச்சியோடை லேன், மானிப்பாய் வடக்கு மானிப்பாய் |
| 26 வர்ணராசாகாங்கேஸ்வரன் | -சென்ஸ்செபஸ்ரியன்றோட் கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் |
| 27 மனோகரன் யசோதரன் | - முதலி கோவிலடி வட்டு மேற்கு வட்டுக்கோட்டை |
| 28 அரியகுட்டி தேவமூர்த்தி | - தொல்புரம் சென்ரர் சுழிபுரம் |
| 29 கே. யோகேஸ்வரன் | -1ம் வீதி, அரசடிவீதி நல்லூர் |
| 30 ஆறுமுகம் முரளிதரன் | - எ.அமிர்தலிங்கம் இல 15 2ம் லேன் பலாலிறோட் யாழ்ப்பாணம் |
| 31 எஸ். ஸ்ரீதரன் | - 134 கச்சேரி நல்லூர் றோட் யாழ்ப்பாணம் |
| 32 ஜேசுதாசன் ஜெயக்குமார் | - 114 சூரியவேலி நாவாந்துறை யாழ்ப்பாணம் |
| 33 ஜே. எட்வேட்கொலின்ஸ் | - 70/2 ஓல்பாக் றோட் கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம் |
| 34 கதிரவேலுசத்தியசீலன் | - வசந்தபுரம் இளவாலை |
| 35 கே. தவராசா | - கொலிச்றோட் பருத்தித்துறை |
| 36 வேலாயுதம் தயாளசிவம் | - வட்டு வடக்கு வட்டுக்கோட்டை |
| 37 தில்லையம்பலம் ஐங்கரன் | - பிள்ளையார் கோவிலடி மாதகல் |
| 38 அம்பலவாணபிள்ளை மனோகரன் | - திருஞானசம் பந்தர் வீதி வட்டுதெற்கு |
| 39 சண்முகலிங்கம் சசிகுமார் | - நீர்வேலி தெற்கு நீர்வேலி |
| 40 பர்னாந்து புஸ்பராசா | - சாரையடி புலோலி தெற்கு வேளாங்கனனி மாதா கோவிலடி புலோலி |
| 41 எஸ். மதனரூபன் | - தம்பளை கந்தரோடை மேற்கு சன்னாகம் |
| 42 முருகன் பாஸ்க்கரன் | - பெரியபுலோ சுழிபுரம் |
| 43 குணலிங்கம் கதாதரன் | - கஸ்தூரி றோட்ஓடக் கரை றோட் பருத்தித்துறை |

பணிப்பாளர்

அரசினர்பொது வைத்தியசாலை

யாழ்ப்பாணம்

(சி.3991)

# 'பண்பாடு' மனித சமுதாயத்தின் செம்மைநிலை

# திருந்திய அறிவுநிலை என்பது தமிழர் கொள்கை

பேராசிரியர்
க. ப. அறவாணன்
(M.A., B.O.L., M. Lit.)

(நேற்றைய தொடர்ச்சி)

ஒரு சந்ததியிடமிருந்து பிறிதொரு சந்ததியாரிடம் பண்பாடுகள் இடமாற்றம் பெறும்பொழுது புதிய சமுதாயத்தினர் பழைய பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்ளலாம். புதியவற்றை சேர்த்துக்கொள்ளலாம். பழையவற்றை விட்டும் விடலாம். பழந்தமிழகத்தில் புலால் உண்ணலும், கள் உண்ணலும், பரத்தை உறவு கொள்ளலும் போற்றப்பட்டன. அவை வேண்டாதன என்று திருவள்ளுவர் சமுதாயம் விலக்கிவைக்கிறது. பிறப்பு முதல் இறப்புவரையுள்ள மணச்சடங்குகளும், பிணச்சடங்குகளும் மற்றைய வழக்கங்களும், பழக்கங்களும் அப்படியே இன்றும் உள்ளன என்று கூறுவதற்கில்லை. காலப்போக்கில் சமுதாயத்தின் வளர்ச்சி தளர்ச்சிக் கேற்ப மாறும் புதியனசேரும்.

பண்பாடு தனிமனிதனை மட்டிலும் அல்லது ஒரு குழுவை மட்டிலுமோ அல்லது ஒரு சமுதாயத்திடம் மட்டுமோ ஒடுங்கிவிடுவதில்லை. தனிமனிதர் பலர் சேர்ந்தது தான் இனம். இனம்பல சேர்ந்ததுதான் சமுதாயம். ஆதலால் தனிமனிதனின்வளர்ச்சி தளர்ச்சியைமட்டும் பண்பாடு என்ற சொல் குறிக்கவில்லை. அதன்வழியாக இனவழிச் சமுதாயத்தின் வாழ்வை அது தங்கிஇருக்கிறது. மனிதன் சமுதாயத்தின் பிரிக்கமுடியாத உறுப்பு. ஆகையால் தனது தேவையையோ, விருப்பத்தையோ செய்துகொள்ள நேரிடையாகவோ மறைமுகமாகவோ தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது. பொருளாதார தேவை மட்டுமன்றி, கலை, எழிலுணர்வு, ஆன்மீகம் போன்ற துறைகளில் தேவைகளை அவன் செய்துகொள்கிறான். மனிதன் தன்பண்பாட்டிற்கு உருவாக்கிய பண்டங்களையும் தவிர, வழக்கு, வழக்காறு, மரபுவழக்கு கொள்கைகள், நிறுவனங்கள் வழிநுட்பங்கள் போன்றனவும் சமூகத்தில் காணக் கிடைக்கின்றன.

பின்னவை எல்லாம் மனிதன் சூழ்நிலையுடன் கொண்ட தொடர்பால் தோன்றியன. எனினும் அத் தொடர்பையே பின்னவை மாற்றவும், தடுக்கவும், ஊக்கவும், திறமை பெற்றிருக்கின்றன. இவ்வாறான பொருள்கள், வழிமுறைகள், பொருள் சார்ந்த, சாராத விருப்பங்கள், நிறைவுகள் ஆகிய எல்லாவற்றையும் பண்பாடு என்ற சொல்லில் மானிடஇயலார் குறிக்கின்றனர்.

'பண்பாடு மனிதனின் கைவண்ணத்தைப் புலப்படுத்துகிறது' என்கிறார் மலிநோஸ்க்கி, தன்னுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ள மனிதன் உருவாக்கிக் கொண்ட துணைக் கருவிதான் பண்பாடு என்றார். சி. சி. நாத் பொருள் சார் பண்டங்களும், திறமைகளும், குறியீட்டுச் செய்கைகளும், நம்பிக்கைகளும், அறிவும் அதை விவரிக்கும் முறைகளும், சமூக மதிப்பின் மூலக் கூறுகளும் சமூக மதிப்பீடுகளும் தான் பண்பாட்டில் அடங்கிய உள் துணைக் கருவிகள் என்கிறார் ஃபால்சன்.

சிலர்எண்ணுவதுபோன்றே பண்பாடு மனிதனின் செய்கையான கலைத்திறன் மட்டுமன்று. மாறாகப் பல்வேறு வழிகளில் கால நேரங்களுக்கு ஏற்ப மனிதனுடைய தன்மையை இயல்பாக வெளிப்படுத்தி அவனுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற உதவுகிறது. இயற்கைக்கும் பண்பாட்டிற்கும் எவ்வித முரண்பாடும் இல்லை, பண்பாடு இயல்பானது. ஆனால் அதன் வகைகளோ வெளித் தோற்றங்களோ சூழ்நிலை, சமூகம், உள்ளம் ஆகியவற்றைச்சார்ந்துள்ளது.

**பண்பாடு தத்துவ இயல் பாதையில்**

1870 ம் ஆண்டை அடுத்து இந்தியாவில் கல்ச்சர் **(culture)** என்றசொல் பற்றிச் சொற்போர்கள் நடந்தன. மத்தியூ அர்னோல்ட கல்ச்சர் அன்ட் அனார்ச்சி என்னும் தலைப்பில் விரிவான ஆராய்ச்சி செய்தார். இதில் கல்ச்சர் என்ற சொல்லுக்கு முடிவான விளக்கம் ஒன்றைத் தந்தார், ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் பக்குவ நிலை என்று அவர் விளக்கினார்.

மக்கள் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் பண் பாட்டின்தன்மைஅறியப் படுகிறது என்கிறார் அர்னால்ட். அவர் குறிப்பிடும் இம் மனப்பண்பு மேலும் மேலும் வளர்வதுதிருந்துவது, செம்மைப்படுவது ஆகும், அறிவு,குணம் முதலியவற்றைத் தொடர்ந்து பேணுகிற மன நிலை. இது பக்குவமாகி முதிர்ந்து கொண்டே செல்லுகின்ற மன நிலை இந்நிலையைப்படிப்படியாக தான் ஒருவர்அடையமுடியும்,இனிமேல் அடைய வேண்டிய ஒரு உச்ச நிலை இல்லையென்ற முடிவு இதற்குக் கிடையாது. கணக்கற்ற படிகள் உடைய உயரப் பயணத்தில் இது ஒரு படிமேல்.மேலும்உயரச் செய்வதேஇதன் இயற்கைதொடரும் பயிற்சியினால்பண்பட்ட திருந்திய நிலையே **(Culture)** கல்ச்சர் எனப் படும், கல்ச்சர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு. மூலச்சொல்குல்தூர **(Cultura)** என்ற லத்தீன் சொல்லாகும். இச் சொல்லுக்குப் பொருள் பண்படுதல் என்பதாகும் **(Agriculture)**அக்கிறிக்கல்ச்சர் என்ற சொற் தொடர்**(Ager-Culturra** என்ற லத்தீன் சொல்லின் திரிந்த வடிவமாகும் ஈண்டுள்ள **Ager**என்பதற்கு வயல் என்றுபொருள் நிலத்தைப் பண்படுத்தும் தொழிலுக்காகி, பண்படுத்தல், அக்கிறிக்கல்ச்சர் என வழங்கி வருகிறது.

நிலத்தின் பண்பட்ட நிலையையுங் தொழில் முறையையும் **Agriculture** என்ற சொல்லால் குறிப்பிட்டது போல, மனத்தின்பண்பட்ட நிலையை **Culture** என்ற சொல்லால் ஆங்கிலத்தில் குறித்திருத்தல் வேண்டும், சுருக்கமாக **Agri Cutura** என்பதுநிலப்பண்பாடு **Culture** என்பது உளப் பண்பாடு· தமிழிலும் பண்படுதல் என்ற சொல்லுக்கு அமைதல் உதவல் சீர்ருதித்தல், செப்பமாதல் என்று பல பொருள் உண்டு. (மதுரைத் தமிழ்ச்சங்கப் பேரகராதி பக்கம் 119), செப்பமாதல் என்னும் பொருளுடையபண்படுதல் என்னும் சொல் நீண்டு பண்பாடு ஆகியிருத்தல் வேண்டும்.முடிவாகப் பண்பாடு என்பது தனி மனிதனின் உயர்குணச்சீர்மையைக் காட்டும் மனத்து இயல்பே. பிறருக்காக தன்னை அளித்தலும் அழித்தலுமே பண்பாட்டில் செயல் வடிவங்கள். மிகச் சிறந்த சமுதாயத்தின் மிகச் சிறந்த பண் ாடுஇது.மனிதப் பருவத்தின் குழந்தைக் குணமன்று மாந்தர் பருவத்தின் தெய்வீகக் குணமாகும்.

**பண்பாடு-சமயஇயல்பாதையில்**

மத்தியூஅர்னால்டின்கருத்து தனிமனிதனையே பெரிதும் சார்ந்திருக்கிறது. ஆனால் பண்பாடு என்பது தனி மனிதனை மட்டுமே சார்ந்திருக்கவில்லை.தனி மனிதன் இனம் சமுதாயம் என்ற மூன்றிலும் ஒன்றித்து உருவாகிறது.மத்தியூ அர்னால்ட் இந்த மூன்று பகுதியையும் சார்ந்து பண்பாட்டை விளக்கவில்லை. பண்பாடு தனிமனிதனோடு ஒடுங்கிப் போய் விடவில்லை. இனத்தோடு சமுதாயத்தோடு அது சார்ந்து இருக்கிறது.இனமும் சமுதாயமும் கூட பண்பாட்டை வளர்க்கின்றன. வாழ்விக்கின்றன. பாடப்பாடும் பாட்டிலும் வரையப்படும் ஓவியத்திலும், அவற்றை அனுபவிக்கும் உணர்விலும் பண்பாட்டின் கூறுகள் அடங்கிக் கிடக்கின்றன.இசை அனுபவங்களும், ஓவியக்கலை அனுபவங்களும் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டின் கலங்களாக விளங்க முடியும்.எகிப்திய நாட்டில் இருக்கின்ற ஸ்பிங்ஸ் உருவங்களும், பிரமிட்டுகளும் அவர்களது பழமைமிக்க கலைப் பண்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன.திராவிடப் பழங்குடி மக்களிடத்து சிற்பக்கலை இருந்த செய்தியைசிந்துவெளி நாகரிகம் எடுத்துக்காட்டுகின்றது.இவையெல்லாம் பண்பாட்டின் கூறுகள் என்பதில் ஐயமில்லை.

தனிமனித மனப்பண்பை வற்புறுத்துவதிலேயே அர்னால்ட் அதிகம் கவனம் செலுத்தியதால் சமுதாயம் பற்றி விரிவாகப்பேசவில்லை. ஆனால் அரசியல் அமைப்பில் ஏற்படும் திருப்பங்கள்,கல்வி விரிவுக்கான வாய்ப்புகள்,சமூகப்பணிகள் பெருகுவதற்குத் தகுந்தவாறு,மாறுவதற்குத் தகுந்தவாறு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாடுகள் மாறுதல் பெறுகின்றன.பல பெண்டிரை மணக்கலாம் என்ற வாய்ப்பு அமைந்த போது பலபெண்டிரை மணக்கும் பழக்கமும் இருந்ததைப் பார்க்கிறோம். பலபெண்டிரை மணத்தில் சட்டப்படி குற்றம் என்று அரசியலாளர் வற்புறுத்தும்போது, பழைய நீதிமாறுவதைப் பார்க்கிறோம், கள் அருந்துதல்,உண்பதில் ஒரு கூறு என்று கருதிய பழந்தமிழர் பண்பாடு,சமண பௌத்தரின் செல்வாக்கிற்குப் பிறகு, கள்ளருந்துதல் குற்றம் என்ற புதிய பண்பாட்டை உருவாக்கியிருக்கிறது;

**பண்பாடும் சமயமும்**

பண்பாடு சமுதாயத்தைச் சார்ந்திருக்கிறது. சமயங்கள் சமுதாயத்தைச் சார்ந்திருக்கின்றன. நிகழ் காலச்சமுதாயத்தில் எதிர்காலத்தின் பழக்க வழக்கங்களைக் கொண்டுவரவேண்டுமானால் சமய ஆதிக்கத்தின் மூலமாகவோ அல்லது அரசியல் ஆதிக்கத்தின் மூலமாகவோ தான் கொண்டுவர முடியும். கிறிஸ்தவ சமயத்தைச்சார்ந்த சமயங்களின் ஆதிக்க காலத்தில் வாழ்ந்த ரி. எஸ்.எலியட் சமபத்தைச் சார்ந்துதான் பண்பாடுதோன்ற முடியும் என்று நம்பினார்.

**பண்பாடு முடிந்தவரையறை**

ஓர் இனத்தின் குணங்கள் அனைத்தும், பழக்க வழக்கங்கள் அனைத்தும் பிறப்பிலேயே தோன்றின என்று கூறுவதற்கில்லை. பிறந்தபின் பிறந்தசூழல், வளரும் சூழல், வாழும் சூழல், இவற்றுக்குத் தகவே அந்த இனத்தின் குணநலன்கள் அமைகின்றன. இவ்வாறு தொடக்கத்தில் தோன்றிய குணங்கள் பரிணாம வளர்ச்சிக்கேற்ப மாந்தரின் அறிவு வளர்ச்சிக்கு தகவிரிவடைகின்றன. அல்லது சரிவடைகின்றன. இவ்வாறு வீழ்ந்தகுணங்களும், வீழாமல் வாழ்ந்த குணங்களும் அந்த இனத்தின் பிரிக்க முடியாத அடையாளச் சின்னங்களாக அமைந்து விடுகின்றன. இனங்கள் தனித்து நிற்கும் நிலை மாறி அன்புச் சூழலாகவும், வன்புச்சூழலாகவும் ஒன்றுடன் ஒன்று கலக்கின்றன. இவ்வாறு கலக்கும்போது ஒரு சில குணங்கள் வருகின்றன. ஒரு சில குணங்கள் போகின்றன. ●

(முற்றும்)

## இராசி பலன்

20-4-2002

(சித்திரை 7, சனி)
அட்டமி பி. இ.1. 08வரை
புனர்பூசம் மு.ப.8.54 வரை
ராகுகாலம் 9 02-10 32
நல்லநேரம் 3.02-4.32
அட்டமி,நவமி

**மேடம்**

மனச்சோர்வு, தேவையற்ற வாதம், முயற்சி தாமதம், உஷ்ண நிலை.

**இடபம்**

காரிய அனுகூலம், அந்நியர் சந்திப்பு, சகோதரர் உதவி, பிரயாண நன்மை.

**மிதுனம்**

வீண் வார்த்தை, தொழில் நன்மை, சயனசுகக்குறைவு, காரிய தாமதம்.

**கடகம்**

தேக சௌக்கியம்,பொருள் சேர்க்கை, செய்தொழில் நன்மை,ஆழ்ந்த சிந்தை.

**சிங்கம்**

தனவிரயம், பிரயாணம், தேவையற்ற கோபம்,முயற்சி தாமதம்.

**கன்னி**

கௌரவமான நிலை, எடுத்த காரியம் கைகூடும், உறவினர் கலந்துரையாடல், பொருள் சேர்க்கை.

**துலாம்**

தொழிலால் நன்மை, பிறர் உதவி, அதிகாரம், காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**

புதிய திருப்பம், பயணம், முயற்சி பலிதம்,கட்டுப்பாடு.

**தனுசு**

மரியாதைக் குறைவு,காரிய தடங்கல், திடீர் நன்மை, உடல்நலக் குறைவு.

**மகரம்**

குடும்ப மகிழ்ச்சி, காரிய ஜெயம்,தனவரவு,நண்பர்கள் சந்திப்பு.

**கும்பம்**

காரிய சித்தி, செய்தொழில் முன்னேற்றம், உடல் நலம்' குடும்ப மகிழ்ச்சி.

**மீனம்**

புத்திரரால் கவலை,கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்,வியாபார நன்மை.

(பழைய நே[illegible]ப் பிடப்பட்டது)

வளவன்

# சமாதான முயற்சியில் அனைவரையும் இணைக்காதுவிட்டால் ஆபத்து

## எச்சரிக்கும் தொனியில் குமார் ரூபசிங்க

(கொழும்பு)

நோர்வேயின் உதவியுடன் இப்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் எதிர்காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நெருக்கடிகளுக்கு உள்ளாகலாம் என்று இன்டர்நாஷனல் அலேர்ட் அமைப்பின் செயலாளர் நாயகம் குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே சமாதான முயற்சிகளை முதன் முதலில் நோர்வே அனுசரணையுடன் ஆரம்பித்தவர்.

எனினும், இப்போது விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை குறித்து தன்னுடன் கலந்தலோசிக்கவில்லை என்று தனது அதிருப்தியை வெளியிட்டிருக்கிறார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எதிராக ஜே.வி.பியுடன் இணைந்து எதிர்ப் பிரசாரம் செய்யப்போவதாக பொ. ஐ. மு. தெரிவித்துள்ளது.இவைகளை அபாயமான சமிக்ஞைகளாகக் கருத வேண்டியுள்ளது.

இதன் மூலம் சமாதான முயற்சிகளில் அனைத்து தரப்பினரையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற உண்மை புலப்படுகின்றது.

இவ்வாறு இணைத்துக் கொள்ளாது விட்டால் சமாதான முயற்சிகளின் பிற்பகுதியில் அவர்களால் நெருக்கடிகள் ஏற்படலாம்.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் மத்திய கிழக்கு நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட. போது இஸ்ரேலின் தொழிற் கட்சியும், பலஸ்தீன விடுதலை இயக்கமுமே முன்னுரிமையோடு செயற்பட்டன. இஸ்ரேலின் லிகுட் கட்சி,பலஸ்தீன கமாஸ் இயக்கம் போன்றவை புறக்கணிக்கப்பட்டன.

இந்தப் புறக்கணிப்பே மத்திய கிழக்கின் இன்றைய நிலைக்குக் காரணம் என்றார். (எ)

**சென்றவாரத் தரம் 05 புலமைப் பரிசில் முன்னோடி வினாத்தாள் பகுதி II இல் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.**

01. த.ஜனந்தினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
02. கெ.மகிந்தன், ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
03. மோ.சஞ்சயன், யாழ். மத்திய கல்லூரி.
04. கு.சுமங்கலி, சைவப் பிரகாச வித்தியாசாலை.
05. ப.ஆரணி, தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.
06. த.வஜீதா, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.
07. உ.ஜீனோஷா, கொக்குவில் நாமகள் வித்தியாலயம்.
08. ச.கஜந்தன், துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை.
09. ம.பகீரதன், திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை.
10. ப.லக்ஷனா, சங்குவேலி அ.த.க.பாடசாலை.
11. அ.ஜெறியோண்சன், யாழ். மத்திய கல்லூரி.
12. ப.மதுசாந், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.
13. பு.குபேரன், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
14. இ.ருபேந்திரன், யாழ். மத்திய கல்லூரி.
15. து.துவாரகன், யாழ். ஏழாலை மகா வித்தியாலயம்.
16. எ.பிரிதர்சினி, சங்கானை சிவப்பிரகாச ம.வி.
17. ப.குபேரன், யாழ். விசாலட்சி வித்தியாசாலை.
18. சி.ஜனகன், யாழ் பரியோவன் கல்லூரி.
19. ஜெ.நரேஷ், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
20. ச.சமீரா, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
21. லோ.கஜீவன், இருபாலை சி.சி.ரி.எம். பாடசாலை.
22. சி.நிருத்திகா, யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி.
23. கி.சிவவதனி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
24. கி.கஜாகரன், தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி.
25. த.அஜந்தன், இருபாலை சி.சி.த.க.பாடசாலை.
26. ம.கார்த்திகா, அ.மி.த.க. சுழிபுரம்.
27. ச.சக்திபாலன், கந்தரோடை தமிழ்க் கந்தைதயா வித்தியாசாலை.
28. எ.துவாரகா, தேவரையாளி இந்துக் கல்லூரி.
29. ஶ்ரீ.தருசன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
30. செ.ஜிதுஸ்மன், உடுவில் மகளிர் கல்லூரி.
31. சி.நாஸ்கர், கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி.
32. பா.தர்சிகா, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
33. த.விமல், யாழ். மத்திய கல்லூரி.
34. வி.கிரிஜா. நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை
35. ஆ.சயந்தினி, ஏழாலை மகா வித்தியாலயம்.
36. யோ.அசாத், அளவெட்டி றோ.க.த.க.வித்தியாலயம்.
37. அ.கரிகாலன், தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
38. இ.லக்ஷன், யாழ். மத்திய கல்லூரி.
39. ம.ஹீர்த்தனா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
40. செ.கோபிகா, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
41. சி.ரஜீவன், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.
42. ம.மனோர்த்திகா, யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.
43. உ.டுசாளினி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
44. சு.தசாங்கன், ஏழாலை மகா வித்தியாலயம்.
45. ஜெ.தட்சாயினி, சங்குவேலி அ.த.க. பாடசாலை.
46. பு.சுதர்சன், துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை.
47. ப.தயானரூபன், இருபாலை சீ.சீ.த.க.
48. சி.றஜீதன், கொடிகாமம் அ.த.க.பாடசாலை.
49. கு.கோபிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.
50. நி.பகீர்த்தன், கோப்பாய் வடக்கு றோ.த.க.க. பாடசாலை.
51. வ.மயூரதி, இருபாலை சீ.சீ.த.பாடசாலை.
52. செ.பிரியங்கா, திருக்குடும்ப கன்னியர் மடம்.
53. இ.மிருதுனா, தாவடி இ.த.க. பாடசாலை.
54. வி.அனுசியன், யாழ். மத்திய கல்லூரி.
55. எஸ்.விதுரன், சென்.ஜோண் பொஸ்கோ.
56. பெசிஸ்டினேஸ்குமார், யாழ்.மத்திய கல்லூரி.
57. அ்.ரஜீவா, இருபாலை சி.சி.த.க.பாடசாலை.
58. த.ஸ்ரீறூபி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
59. மு.குணாதரன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
60. ம.பிரவிந், கரவெட்டி மெ.மி.த.க.பாடசாலை.
61. த.கோகுலன், அட்டகிரி சைவ வித்தியசாலை.
62. செ.சிந்துஜன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
63. ச.திபாகர், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
64. வாகீசன், சென்.ஜோண்.பொஸ்கோ.
65. சி.கஜாதரன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை..
66. எஸ்.சிந்துகேயன், யாழ். மத்திய கல்லூரி.
67. கா.திவேயன், ஏழாலை மகாவித்தியாலயம்.
68. சி.சிந்துயன், ஏழாலை மகாவித்தியாலயம்.
69. பி.டியோனிஸ்கூரே, மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
70. வி.தனுசன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
71. ச.சத்தியகுமார், கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.
72. வி. கார்த்திகன், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.
73. வா. இளங்கோவன், யாழ்.பரியோவான் கல்லூரி.
74. ம.நிகிந்தன், கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரி.
75. சி. ரணுசியா, இணுவில் மத்திய கல்லூரி.
76. ஜெ.நிர்மலன், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.
77. செ.ஜெகப்பிரியா, சென் ஜோண் பொஸ்கோ.
78. வ.லக்ஸ்மன், மானிப்பாய் சென் ஆன்ஸ்
79. நா.பிரகாஷ், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.
80. பா. சந்திரிகா, தேவரையாளி, இந்துக் கல்லூரி.
81. ம.நிவந்தன், மேலைப்புலோலி சைவப்பிரகாசவித்தியாசாலை.
82. க.லக்ஷிகா, துன்னாலை மெ.மி.த.க பாடசாலை.
83) க. கௌதமன், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
84) இ. பிரதிகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
85) கி. சர்மிளா, உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்.
86) த. துவாரகன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
87) சு. தருஷன், யாழ் மத்திய கல்லூரி.
88) சி. ஜெனதரன், கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை.
89) செ. சறணியா, ஏழாலை மகா வித்தியாலயம்.
90) க. சாயிராம், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
91) மா. சிவசுதன், கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை.
92) சி. சியாமலா, ஏழாலை மகா வித்தியாலயம்.
93) ப. சயந்தன், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
94) அ. கீதன், பளை மத்திய கல்லூரி.
95) க. பிரியங்கா, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.
96) செ. மயூரன், உடுவில் மகளிர் கல்லூரி.
97) சி. கண்ணன், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
98) க. அபிராம், ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
99) அ. சரன்யா, கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை.
100) இ. தபேஸ், ஏழாலை மகா வித்தியாலயம்.
101) யோ. திருக்கணேசன், வல்வை அ.மி.த.க.பாடசாலை
102) பி. ஜோதிகா, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
103) ர. சரண்ஜா, வல்வை றோ.க.த.க.பாடசாலை.
104) செ. நிரோஜன், கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை.
105) ப. பிரியதர்ஷினி, இணுவில் இந்துக் கல்லூரி.
106) வி. விஜேதா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
107) ம. ஜெஸ்மினா, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
108) ஶ்ரீ. அகிலன், கொடிகாமம் அ.த.க.பாடசாலை.
109) ந. ஜெயப்பிரியா, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.
110) வே. ஜெயவதனி, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.
111) பி. யோபிதா, வல்வை சிவகுரு வித்தியாலயம்.
112) சி. கபிலன், உடுவில் மகளிர் கல்லூரி.
113) ப. சதாசினி, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
114) ஜெ. துவாரகன், யாழ். மத்திய கல்லூரி.
115) யே. ஸரண்சியா, சென்ஜோண். பொஸ்சோ.
116) வை. மதுவந்தி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
117) சி. கோபிநாத், உடுவில் மகளிர் கல்லூரி.
118) தி. துஷாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
119) த. விஸ்னுப்பிரியா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
120) தே. நிஷாந்தன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
121) க. கீர்த்திகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
122) த. துவாரகன், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
123) எம். ஜோன் பிரியந், சென். ஜோண்ஸ் கல்லூரி.
124) தி. ஜிந்தூரகன், சென். ஜேண் பொஸ்கோ.
125) ஜெ. நிவிதா, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
126) சு. மைதிலி, நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
127) ப. விஸ்ணுஜன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
128) க. பிரயாழினி, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
129) ஶ்ரீ. சரத்பவன், கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி.
130) க. மயூரன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
131) செ. சுஜேனி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
132) இ. தர்சிகா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
133) மா. வருணபாலன், ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்.
134) சி. ஜங்கரன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
135) றெஜீஸ் அனோஜி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
136) ம. பிரதீபன், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.
137) வே. அஜலக்ஷன், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
138) க. திவ்விஜா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
139) வ. திலக்ஸ், யாழ். மத்திய கல்லூரி.
140) சு. அருணியா, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.
141) வ. ரேனுகன், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
142. இ.கிங்ஸ்ரினா, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
143. க.கபிலேஸ்வரி, நாவாந்துறை றோ.க.த.வித்தியாலயம்.
144. ஜெ.துவாரகன், யாழ். மத்திய கல்லூரி.
145. ப.சதாசினி, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
146. சி.கபிலன், உடுவில் மகளிர் கல்லூரி.
147. பி.யோபிகா, வல்வை சிவகுரு வித்கியாசாலை.
148. வே.ஜெயவதனி, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.
149. வி.சஞ்சீவன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
150. தி.நகுல்றாஜ், கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.
151. சி.சிவப்பிரஷாந், சென். ஜோண் பொஸ்கோ.
152. க.மதுமதி, தேவரையாளி இந்துக் கல்லூரி.
153. த.சோபிதா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
154. சி.ருணித்தா, கைதடி முத்துக் குமாரசுவாமி வித்தியாலயம்.
155. இ.மேரிஜென்சிஜா, கரம்பொன் சிறியபுஷ்பம் ம.ம.வித்தியாலயம்.
156. க.பிருந்தன், இணுவில் மத்திய கல்லூரி.
157. இ.புவிப்பிரபா, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
158. ஜோ.சன்யுதா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
159. சி.சஜிதா, கோப்பாய் மகா வித்தியாலயம்.
160. கோ.கவிதாஸ், இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை.
161. வி.நிதூஷன், கைதடி குருசுவாமி வித்தியாலயம்.
162. க.உதயராஜ், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
163. வி.தீபன்ராஜ், ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
164. ந.நிதர்சன், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி
165. தி.குணகீதன், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.
166. ந.கொளசிகா, தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்.
167. ப.சோபியா, நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை.
168. ச.மதுரா, மயிலணி சைவ மகா வித்தியாலயம்.
169. ச.மஞ்சூரி, மயிலணி, சைவ மகாவித்தியாலயம்.
170. கு.தமிழ்மதி, புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம்.
171. க.துவாரகன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
172. ஶ்ரீ.சரண்யா, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
173. டோ.றிபிலிசாந், சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்
174. க.தர்ஷிகன், யாழ்.மத்திய கல்லூரி.
175. கே.விதர்சான், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
176. ம.தவநீதன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
177. சி.சந்திரசேகரம், கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.
178. அ.கோபிநாத், கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை.
179. செ.யசோதா, அராலி முருக மூர்த்தி வித்தியாசாலை.
180. யோ.கஜீந்தன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
181. கெ.மயூன், யாழ்.மத்திய கல்லூரி.
182. ஜெ.ஹிருசாந், கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.
183. த.பிரணாளன், தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
184. ம.கஜலக்ஷி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
185. சி.சுகன்யா, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
186. க.சுதர்சன், யாழ். மத்திய கல்லூரி.
187. செ.குமுதினி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.

## பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் நடாத்தப்படும் சைவப் புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வுகள் இம்மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இத்தேர்வு கொழும்பு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம் பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவிருந்த சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் பட்டமளிப்புவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருப்பதாக சங்கத்தின் செயலாளர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (உ)

## இந்துசமயப் பேரவையால் கலைஞர்கள், அறிஞர்கள் 10பேர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

போக்கால சூழ்நிலையில் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மத்தியில் கலைஞர்களும், அறிஞர்களும் ஆற்றி வரும் நிதானமான சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நடவடிக்கையில் இந்து சமயப் பேரவை ஈடுபட்டு வருகின்றது.

இந்த வகையில் இவ்வாண்டு, சங்கீத பூஷணம் வி.கே. நடராசா (கர்நாடக சங்கீதம்) பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மா(தமிழ், வடமொழி இலக்கியம்)தாவடியூர் ஒதுவார்மூர்த்தி திருஞானசம்பந்தன் (பண்ணிசை) கலாவிநோதன் சின்னமணி(வில்லிசை) சுரஞான கலாநிதி எம்.பி.பஞ்சாபிகேசன் (நாதஸ்வரம்) க.நடேசன் சிவஷண்முக மூர்த்தி (காதப்பிரசங்கம்) உ.இராதாகிருஷ்ணன்(வயலின்) சிவசுப்பிரமணியம்(ஓவியம்-சிற்பம்) அமரசிங்கம் (தேர்-சப்றம்-சிற்பம்) பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் (புராண படனம்) ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (உ)

## கடந்த வாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்

1. திரு.
2. 27 பெர்ணாண்டே வீதி, இரத்தினபுரி.
3. ஐம்பது ரூபா.
4. இரத்தினபுரி.
5. 0057342
6. கமநல சேவை நிலையத் தலைவர்.
7. அங்கத்துவப் பதவி விண்ணப்பம்.
8. 6
9. 3
10. 2
11. 1
12. 4
13. 5
14. 2
15. 3
16. 3
17. Friend
18. School
19. Teacher
20. Morning
21. நல்லது
22. புத்தகங்கள்
23. நாங்கள்
24. அன்பு
25. 38
26. 30
27. 68
28. பிரிவு I
29 47
30. 315
31. இலங்கை
32. கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.
33. புத்தகங்கள் /ஏடுகள்.
34. சங்குநாதம்.
35. மலிவாகப் பெறலாம்.
36. வெளியீடு செய்பவர் உரை
37. 35 c.m
38. 67m
39. 4.2m
40. 3 நிமிடம் 17 செக்கன்
41. 3
42. 2
43. 1
44. 1
45. 2
46. 3
47. 1
48. 1200.00
49. தரம் 3
50. 183
51. 315.00
52. 624.00
53. 7L 800m.l
54. மு.ப.615 -பி.ப.410
55. 9மணி 55 நிமி
56. 75
57. ஆண்கள் 32 பெண்கள் 37
58. ரி.வி.அன்ரனாவில்
59. இல்லை.
60. மேலே கூறப்பட்ட பொருட்களில் இரண்டு
61. பறவையினங்கள் இருப்பதைத் தடுக்க
62. கீழே செல்லும்.
63. கம்பி விரிவதனால் நீளம் கூடும்.
64. எரியும் மெழுகுவர்த்திச் சுவாலையிலிருந்து
65. திண்மம், திரவம், வாயு.
66. ஒளி, வெப்பம்.
67. 312.00
68. 252.00
69. 931.00
70. 100.00
71. 90.00
72. 1685.00
73 இரத்தினபுரி/ கேகாலை / களுத்துறை
74. சீனா
75 - 80. பொருத்தமான வசனங்கள்.

## இன்று ஒரு தகவல்

## சீரகத்தின் சிறப்பு அறிவீர்

சீரகம் இந்தியாவில் வங்காளம், அஸ்ஸாம் முதலிய மாநிலங்கள் தவிர மற்றஇடங்களில் பயிரிடப்படுகிறது. முக்கியமாக உத்தரப் பிரதேசம், பஞ்சாப் முதலிய மாநிலங்களில் கூடுதலாக விளைவிக்கப்படுகிறது. சீரகத்துச்கு போஜனகுடாரி, உபகும்பபீசம், நற்சீரி, அசைசீரி, துத்தசாம்பலம், பித்தநாசினி, மேத்தியம் முதலிய வேறு பெயர்களும் உண்டு. விதை பயன்படும் உறுப்பாகும். ஒரு சிறிய செடியாக வளர்க்கப்படுகிறது. ஒரு வருடத்தில் பலன் கொடுக்கும்.

மெல்லிய வாசனை மிகுந்த சிறு செடி. தண்டின் மேலே கிளைகள் தோன்றும். மலர்களைத் தவிர மற்றப்பகுதிகள் ஒளிரும் தன்மை உடையது. இலைகள் துண்டுபடுத்தப்பட்டிருக்கும். மெல்லிய தண்டு போன்றது. பூக்கள் கூட்டு அம்பெல் மஞ்சரி வகையைச் சேர்ந்தது. அம்பெலில் பூக்களின் எண்ணிக்கை குறைவாகவேயிருக்கும். பூவடிசெதிலும் சிறு பூவடி செதிலும் குறுகியவை. பூக்கள் வெண்மை நிறமாகவோ, இளஞ்சிவப்பு நிறமாகவோ இருக்கும். கனி தடித்த ரோமங்கள் கொண்டவை. கனி குறுகி நீண்டு சிறிதாகப் பக்கவாட்டில் அமுக்கப்பட்டிருக்கும். துவர்ப்பியாகவும், வயிற்றிலுள்ள வாயு அகற்றியாகவும் செயல்படும். வெப்பமுண்டாக்கிப் பசியைத் தூண்டும்,

குணமும் பயன்களும் வருமாறு; சீரகத்தால் உடல் உஷ்ணம் குறையும், வயிற்றுவலி, ஈரல் நோய், காசம், கல்லடைப்பு, குருதிக் கழிச்சல், இரைப்பு, தொண்டைக் கம்மல், மூக்கு நீர் பாய்தல், வெறி, வாத நோய்கள் விலகும். இதுஉடலுக்கு வலுவைத் தந்து சண்ணுக்குக் குளிர்ச்சியையும் உண்டுபண்ணும். பித்தத்தினால் ஏற்படும் குற்றத்தைத் தன்னிலைப்படுத்தி, வயிற்றில் மந்தத்தைப் போக்கி, பசியை உண்டாக்கி உணவைச் செரிக்குமாறு செய்யும். சீரகத்தை நாட்டுச் சர்க்கரையுடன் சேர்த்து தொடர்ந்து உண்டு வந்தால் தேகம் வன்மை பெறும். தவிர, கீழுதடு, மேலுதடு வீங்கிப் போனதனால் ஏற்பட்ட நோய் விலகும். சீரகத்தைக் கையாந்தகரைச் சாற்றில் ஊறப்போட்டு எடுத்தபொடி 4கிராம் எடை, சர்க்கரை 2 கிராம் எடை, சுக்குப் பொடி 2 கிராம் எடை என மூன்றையும் கலந்து தினமும் இரு வேளையும் உண்டுவர காமாலை, வாயு, உட்சுரம் தீரும். சீரகம் குறுந்தொட்டிவேர் சமஎடை கூட்டிக் குடிநீர் செய்து சாப்பிட மூன்று நாள் ஆறு வேளையில் குளிர்காய்ச்சல் நீங்கும்.

இதை மணத்துக்காகவும் சீரணம் உண்டாவதற்காகவும் உணவில் சேர்ப்பது வீட்டு வழக்கம். குறிப்பாக வெந்நீரில் சீரகத்தைப் போட்டுச் சில மணி நேரம் சென்றபின் அருந்துவது வழக்கம். பித்த சம்பந்தமான நோய்களைத் தீர்ப்பதில் சிறந்தது. மேலும் வயிற்றோடு சம்பந்தமான நோய்களிலும் இது அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. சீர்+அகம்=சீரகம் அகம்—வயிற்றைச் சீர் செய்வதாலேயே இப்பெயர் ஏற்பட்டது.

100 சீரகத்தில் மாவுச்சத்து 36கி, புரதச்சத்து 18.2கி, கொழுப்புசத்து 15.1கி, கல்சியம் 480 மி. கி. பொஸ்பரஸ் 390 மி.கி. இரும்பு 30.8 மி.கி. விற்றமின் 'ஏ' 864ஐ.யூ. நியாசின் 2.5மி.கி. விற்றமின் சி, 179 ௲மை. கி. மொத்தக்கலோரிகள் 157. அன்றாட உணவில் பயன்படுவதைப் போலவே, இது மருத்துவத்திலும் பயன்படுகிறது. சீரகப்பொடியை வெண்ணெயில் வைத்துக் கொடுக்க எரிகுன்மம் தீரும். 34 கிராம் சீரகத்தை 1,400 மி. லி. நல்லெண்ணெயில்இட்டுக்காய்ச்சி சீரகம் ஒடியக்கூடிய பதத்தில் வடித்துக் கொள்ளவேண்டும். இந்த எண்ணெயைக்கொண்டு தினமும் தலைமூழ்கிவர, கண்ணோய், மயக்கம், தலைவலி, வாந்தி ஆகியவை தீரும். இதனைக்கொண்டு செய்யப்படும் சீரகச்சூரணம், சீரகத்தைலம், மயிலிறகாதிசூரணம் போன்ற சித்த மருந்துகள் பெரிதும் வழக்கிலுள்ளன. பஞ்சதீபாக்னி சூரணமும், பஞ்சதீபாக்னிலேகியமும் இதனை அடிப்படையாகக் கொண்டு செய்யும் சித்த மருந்துகளாகும்.

டாக்டர் இரா. கண்ணன்

# யுத்தத்தின் மத்தியிலும் யாழ். மக்கள் பண்பாட்டுடன் வாழ்கின்றார்கள்

## ரவி தமிழ்வாணன் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் எவ்வளவோ துன்பங்கள் துயரங்ங்களைச் சந்தித்த பின்னரும் யாழ் மக்கள் இன்றும் உறுதியுடனும் பண்பாட்டுடனும் வாழ்ந்து கொண்டிருப்பதை காணும் பொழுது பெருமையாக இருக்கிறது

இவ்வாறு தமிழகத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் ரவி தமிழ்வாணன் மகிழ்ச்சி தெரிவித்தார்

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில்எழுத்தாளர் தமிழ்வாணனுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்இதனைத் தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ் மக்கள் கல்வி மீது அளவற்ற மதிப்புவைத்துள்ளார்கள் இதனைக் காணும் போது உண்மையிலேயே உள்ளம் பூரிப்படைகிறது

நான் 1981 ம் ஆண்டு யாழ்ப்பாணம் வருவதற்கு முயற்சித்தேன் எனினும் அப்போது இங்கு நிலவிய அசாதரண சூழ்நிலை காரணமாக எனது முயற்சி கைகூடவில்லை எனினும் இப்பொழுதாவது யாழ்ப்பாணம் வந்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு வருவதற்கு முன்னர் ஒருவித அச்ச உணர்வு என்னில் காணப்பட்டது. ஆனால் இங்கு வந்தவுடன் அவ் உணர்வே காணாமல் போய்விட்டது

யுத்தம் நடைபெற்ற இப் பிரதேசத்தில்இத்தனை செந்தமா என்ற உணர்வு என்னை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்கப்போகிறார்கள் என்பதை அறிந்து கொண்டதும் மகிழ்ச்சியடைந்தேன். இது ஒரு நல்ல வரவேற்கத் தக்க விடயம். தமிழ் மக்களுக்கு இனி ஒரு அமைதியான வாழ்வு கிடைக்குமென நம்புகிறேன்.

பொங்குதமிழ் நிகழ்வுகளையும் அறிந்து கொண்டதில் மகிழ்ச்சியாக உள்ளது.

யாழ் பூமி சிறந்த ஒருபல்கலைக்கழகத்தை பெற்றிருக்கின்றது. அதனைவிட சிறப்பு என்னவென்றால் கற்றவர்கள் யாழ்ப்பாணத்திலே நிறைந்திருப்பதுதான்.

இன்றைய சமாதான சூழ்நிலையிலும்சிலகெடுபிடிகளை மக்கள் அனுபவிப்பது வேதனைச்குரியதே.

எனினும் யாழ்.மக்கள் இக்கெடுபிடிகளுக்கு பழகி விட்டார்கள போலவே தெரிகிறது.

பல நாடுகளுக்கு நான் பயணங்கள் செய்திருக்கிறேன். ஆனால்கட்டுநாயக்காவிமான நிலையத்தில் இடம்பெற்ற கெடுபிடிகளைப் போல எந்தஒரு கெடுபிடிக்கும் இதுவரை நான் முகம்கொடுக்கவில்லை விமானத்தளத்திலிருந்து விமானத்தில் ஏறுவதற்கு மாத்திரம் 25 நிமிடங்கள் எடுத்தது.

யுத்த சூழல் நீங்கி தமிழ் மக்கள் நலமாய் வாழ இந்திய மக்கள் சார்பாக இறைவனை பிரார்த்திக்கின்றேன் என்று ரவி தமிழ் வாணன் மேலும் தெரிவித்தார். (இ -19)

## தங்கத் தமிழே வருக

(நெடுந்தீவு)

நெடுந்தீவின் துறைமுகப் பகுதி, மத்திய பகுதிகளில் புலிகளை அழைக்கும் சுவரொட்டிகள் ஏராளமாக ஒட்டப்பட்டுள்ளன.

- தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்னும் தமிழ் தேசிய தலைவரின் வழிகாட்டலில் வீறு நடை போடும் விடுதலைப் புலிகளே வருக! வருக!
- செங்கடல் மீதிலே செந்நீர் சொரிந்த செம்மலைச் செல்வங்களே வருக! வருக!
- தானை தலைவன் அடிச்சுவட்டில் களம் வென்று தமிழனின் தன்மானம் காத்திட்ட தங்கத் தமிழே வருக! வருக!

ஆகிய வாசகங்கள் அதில் காணப்படுகின்றன. (உ-249)

## 22, 23 ஆம் திகதிகளில் சுகாதார அமைச்சர் யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார, போஷாக்கு, சமூக நலத்துறை அமைச்சர் டி.எம்.தயாரத்ன எதிர் வரும் 22, 23 ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உத்தியோக பூர்வ விஜயம் செய்யவுள்ளார்.

22 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சிய பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ள கூட்டத்தில் வைத்தியசாலை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (எ)

## விபத்தில் சகோதரர்கள் படுகாயம்

(நவக்கிரி)

புத்தூர் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் லொறி விபத்தில்,மோட்டார் சைக்கிளில் வந்த சகோதரர்கள் இருவர் காயமடைந்த நிலையில் அச்சுவேலி அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச் சேர்ந்த ச. பார்த்தீபன் (வயது23),ச. சுதன் (வயது20) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (உ-233)

## முஸ்லிம் மக்கள் சுயவிருப்பின் பேரிலேயே மீளக்குடியமர முடியும்

(கொழும்பு)

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் வற்புறுத்தலின் பேரில் மீளக்குடியேற்றப்படமாட்டார்கள்என்பதுடன் அவர்கள் ஒவ்வொருவரும் தமது சுயவிருப்பின் பேரிலேயே குடியேறமுடியும்.

தலைவர் பிரபாகரனினாலும் முஸ்லிம்காங்கிரஸினாலும் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக, இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களிற்கு விளக்கும் நோக்கில் கடந்த புதன் கொற்றாளம் நகர மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே கப்பல்துறை,கிழக்கு அபிவிருத்தி துறைமுக அபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மீள் குடியேற்ற நடவடிக்கைகளை திடீரெனஓரிருநாள்களில் பூர்த்தி செய்துவிட முடியாது.

அவ்வாறு முஸ்லிம்களாகிய நாங்கள் செயல்படுவோமாயின் மக்கள் மத்தியில் வீண் சந்தேகங்கள் எழ வாய்பேற்படுவதுடன் சமாதானம் தொடர்பாக மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தும் எனபதால் மீள் குடியேற்ற நடவடிக்கைகளினை நம் விருப்பின் பேரிலேயே மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## குடாநாட்டிற்கான தபால்களை தரைவழியாக எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம்காங்கேசன் துறை வந்தடைந்த சர்வதேச நோயாளர் செஞ்சிலுவைச் சங்க கப்பலில் குடாநாட்டிற்கான 309 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அதே சமயம் இங்கு சேகரிக்கப்பட்ட 34தபால் பொதிகள் அக்கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டிற்கான தரை வழிப்பாதை திறக்கப்பட்டதையடுத்து தரை வழியாக இந்தபால்பொதிகளைஎடுத்து வருவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அநேகமாக பஸ் போக்குவரத்து சீரானதும் தரைவழியாக தபால் விநியோகம் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## நிர்வாகசபை தெரிவுக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலைய2002 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டமும், சாவகச்சேரி பிரதேச சபைக் குட்பட்ட சனசமூக நிலையங்களின்புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டமும் நாளை ஞாயிறு மு. ப. 10. 00 மணிக்கு கச்சாய் உப அலுவலக நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும்தலைவர்,செயலாளர் பொருளாளர் ஆகிய மூவர் இத்தெரிவுக் கூட்டத்தில்கலந்துகொள்ளுதல்வேண்டும் என யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,ரி. வி. கிருஷ்ணசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-9)

## பயணிகள் சேவை குறித்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தலைவர்ஆட்சேபனை

(கொழும்பு)

தென்பகுதிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பயணிகள் சேவையை குறிப்பிட்ட சிலர் தனியார் வாகனங்கள்மூலம் நடத்திவருவது பற்றி தனியார் பஸ்உரிமையாளர் சங்கத்தலைவர் கெமுனு விஜயரட்ண ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்சங்கங்களின் அனுமதியின்றி பிரபல வர்த்தகர்கள் சுமார் 800 ரூபா கட்டணம் அறவிட்டு இவ்வாறு பயணசேவை நடத்தி வருவதாகவும் இதற்கு பயணிகள் சேவை தொடர்பாக ஏற்பட்ட தாமதமே காரணம் என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-79)

## சிந்தனைக்கு விருந்து

### கொள்ளை கொள்ளும் நீசர்கள்

மிதிவெடி உண்டென வேகிலி கொண்டவர்
வீடுகள் செல்லார்கள்
பதியெழுந் தாரவர் மீண்டிலர் என்பதால்
பயந்தனை விட்டோர்கள்
குதுகல மிக்கவர் செய்திடு தீமைகள்
கொஞ்சமோ? பஞ்சைகளின்
நிதியென உள்ளன கொள்ளும் இவர்களை
நீசர்கள் எனலாமே!

- பழையவன்

# தமிழக சட்டசபை வரலாற்றில் ஜெயாவின் தீர்மானம் கறுப்புப் புள்ளி

## கலைஞர் இவ்வாறு கண்டனம்

(புதுடில்லி)

தமிழ் நாட்டுசட்டசபையில் வரலாற்றில் கறைபடிந்த தீர்மானம் ஒன்றுஎடுக்கப்பட்டுள்ளதாக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை கைது செய்ய வேண்டுமென்று சட்ட சபையில் எடுக்கப்பட்ட தீர்மானந் தொடர்பாக கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானத்தை குழப்பும் நோக்குடனேயேதமிழகமுதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் இத் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளார் எனவும் அவர் கண்டித்துள்ளார். (உ-7)

## பங்களாதேஷ்- இலங்கை வான் போ. வ. மீண்டும்

(டாக்கா)

பங்களாதேஷிற்கும் இலங்கைக்கும் இடையில் மீண்டும் விமானசேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சட்டுநாயக்க விமானத் தளத்தில் நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் இவ் விமானசேவைகள்இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தன.

தற்பொழுது இங்கையில் சமாதான முயற்சிகள் நடைபெறுவதனால் மேற்படி விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (செ)

## காத்மண்டுவில் குண்டு வெடிப்பு இருவர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாளத் தலை நகர் காத்மண்டுவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 2 பேர் பலியாகியுள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னராட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து 6 ஆண்டு காலமாக தாக்குதல் நடத்திவரும் மாவோ தீவிர வாதிகளே இக்குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் என தெரிவிக்சப்படுகிறது.

1996 முதல் இடம் பெற்று வரும் மாவோ கிளர்ச்சியாளர்களின் வன்முறைகளில் 3 ஆயிரத்து 500 பேர் இதுவரை பலியானதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பாக். இராஜதந்திரி தாக்கப்படவில்லை மறுக்கிறது இந்தியா

(புதுடில்லி)

புதுடில்லியில் உள்ளபாகிஸ்தான் இராஜதந்திரி ஒருவரை சித்திரவதைசெய்ததாக கூறப்படும்குற்றச்சாட்டுக்களை இந்தியாமறுத்துள்ள து.

குறிப்பிட்ட இராஜதந்திரி சித்திரவதை செய்யப்பட்டார் என்றும் அவருக்கு மின் அதிர்ச்சி அளிக்கப்பட்டது என்றும் சுமத்திய குற்றச்சாட்டுக்களில் எந்த உண்மையும் இல்லை என்று இந்திய வெளியுறவுஅமைச்சின்பிரதம பேச்சாளர் நிருகம ராவ் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

அலி அபாஸ் என்ற பாகிஸ்தான் அதிகாரி 10ற்கும் மேற்பட்ட இந்தியபுலனாய்வு அதிகாரிகளினால் கடத்தப்பட்டு தீவிரமாகத் தாக்கப்பட்டுள்ளதுடன் அவர் இரசாயன மற்றும் மின்னியல் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்என பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியிருந்தது.

இது தொடர்பாக விசேடமாக கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே நிருகம ராவ் இவ்வாறு இதனைமறுத்துள்ளார். (உ-7)

## தாக்குதலை வரவேற்று ஒஸாமாபின்லேடன் உரை

(வாஷிங்டன்)

அமெரிக்காமீது கடந்தசெப்டெம்பர்மாதம் இடம்பெற்ற விமானத் தாக்குதலால் அமெரிக்காவுக்கு பொருளாதார ரீதியில் ஏற்படுத்திய தாக்கத்தை ஒஸாமா பின்லேடன் வரவேற்று உரையாற்றுவதை வெளிக்காட்டும் வீடியோ ஒளிப்பதிவு நாடா அண்மையில் ஒளிபரப்பப்பட்டது.

மத்தியகிழக்கு ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் அண்மையில் விசேட ஒளிபரப்பு சேவையிலேயே இதனை ஒளிபரப்பியது.

இதேவேளை குறிப்பிட்ட ஒளிநாடா கடந்த டிசம்பர் மாதம் முற்பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கான சான்றுகள் இருப்பதாக அந்த நிலையம் கூறியுள்ளபோதிலும் அந்த சான்றுகள் எவை என்பதையோ அல்லது ஒளிப்பதிவுநாடா எப்படிக் கிடைத்தது என்பது பற்றியோ அந் நிலையம் தெரிவிக்கவில்லை.

இதேவேளை செப்டெம்பர் மாதம் ஒரு பில்லியன் டொலருக்கு மேற்பட்ட நட்டம் ஏற்படுத்தும் அளவிற்கு வெற்றிகரமாக மேற்படி தாக்குதல் நடத்திய 19 தியாகிகளுக்கும் நன்றி செலுத்துவதாக பின்லேடன் கூறுவது அந்த ஒளி நாடாவில் பதிவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பழ. நெடுமாறன்மீது வழக்குத் தாக்கல்

(சென்னை)

தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் எனக் கூறி தமிழகப் பொலிஸாரால் அவர் மீது இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளை 'கியூ' பிரிவு பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் தொடர்பாக 'சிவந்த தமிழீழம்' என்ற புத்தகம் வெளியிட்டமையும், வன்னியில் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் நடத்திய மாநாடு தொடர்பாக திறனாய்வுக்கூட்டம் ஒன்றை நடத்தியமையுமே இவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களாகும்.

இதேவேளை,இவர் எழுதிய 'சிவந்த தமிழீழம்' என்ற புத்தகத்தின் ஆயிரத்து 700 பிரதிகளை பிரான்ஸிற்கு அனுப்பிய குற்றச்சாட்டில் ஸாகுல் ஹமீட் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (செ)

## இஸ்ரேலியருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(ரெல்அவிவ்)

இஸ்ரேல் படையினரால் பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டு புதை குழிகளுள் புதைக்கப்படுவதை எதிர்த்து பலஸ்தீன மனித உரிமைக்குழுக்கள் இஸ்ரேலிய நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (செ)

## வன்னி பயணம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி. ப. வேலாயுதம்பிள்ளை வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளார்.

மருதங்கேணி பகுதியில் மீளவும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையை இயக்குவது தொடர்பாகஆராயும் பொருட்டு ஒருகுழுவினருடன் அவர் வன்னி சென்றுள்ளதாக தெரியவருகிறது. (த-43)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்துவழங்கி வரும் திரைப்படக் காட்சித்தொடரில், பிரபல சோவியத் நாவலாசிரியரான''லியோடால்ஸ்டாய்'' (LEOTOLSTOY) எழுதிய 'WAR AND PEACE' (போரும் சமாதானமும்) என்ற பிரபலமான நாவலைத் தழுவிய திரைப்பட வடிவத்தின் இரண்டாம்பாகம்இன்று மு. ப. 10. 00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆர்வலர் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## நூலக விஞ்ஞானம் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் தொடர்பியலுக்கான ஆங்கிலம், உயர் ஆங்கிலம்அலுவலகமுகாமைத்துவம் ஆகிய அடிப்படைகற்கைநெறிகளும்முன்பள்ளிஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியும் இடம் பெற்று வருகின்றது.

இந்த வகையில், நூலக விஞ்ஞானத்திற்கான அடிப்படைக் கற்கைநெறி வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதென புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (உ)

## தீப்பெட்டி ஏற்றிவந்த லொறி வெடித்துச்சிதறியது

(புதுடில்லி)

கர்நாடக மாநிலம் துல்கூர் மாவட்டத்தில்உள்ளகிராமம் ஒன்றில் தீக்குச்சிகளை ஏற்றிவந்த லொறி தீப்பற்றி வெடித்ததில் 13 பேர் பலியானதுடன்,30பேர் படுகாயமடைந்துள்ளனர்.

லொறியில் இருந்த தீக் குச்சிப் பெட்டிகளை இறக்கி வைக்க முற்பட்ட வேளையே அது தீப்பற்றியதாலேயே வெடித்துச் சிதறிள்ளதாக தெரியவருகிறது. (உ-7)

## ஜெயாவின் கோரிக்கை வாஜ்பாயால் நிராகரிப்பு

(புதுடில்லி)

குஜராத் முதல்வர் நரேந்திர மோதியைப்பதவி விலக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்த கோரிக்கையை பிரதமர் வாஜ்பாய் நிராகரித்துள்ளார்.

ஜெயலலிதாவின்இக்கோரிக்கையையிட்டு தான் ஆச்சரியப்படவில்லை எனக் கூறியுள்ள பிரதமர்,தமது கூட்டணிக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகமே தவிர அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் அல்ல எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஜெயலலிதாவின் இக் கோரிக்கை தொடர்பாக தெலுங்குதேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு, இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்றபடியால் கட்சிகள்தமது கருத்துக்களைக் கூறுவதற்கு உரிமையுண்டு எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ

## சீன விமானத்தைக் கடத்த முயன்றவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

(பீக்கிங்)

சீனாவின் உள்நாட்டு விமான சேவையில் ஈடுபட்ட விமானத்தை கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

விமானத்தை கடத்த முயன்றவரை விமானியும் பயணிகளும் இணைந்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி நபர் விமானத்தைக் கடத்தி தென்கொரியாவுக்கு கொண்டு செல்ல முயன்றதாக கூறப்படுகிறது. (இ-5)

## இலங்கை இளம் பெண் வான் மோதி மரணம்

(திருச்சி)

திருச்சி அருகே நேற்றுமுன் தினம் காலை காரும்,வானும் மோதிக் கொண்டதில் இலங்கைப் பெண் ஒருவர் அந்த விடத்திலேயேமரணமானார்.

கூடச் சென்ற சகோதரன் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

திருச்சி சீனிவாசகம் 2வது குறுக்குத் தெருவில் வசிக்கும் கிளிநொச்சியைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரது மகளான விநோதினி(வயது 22)என் பவரே பழனி முருகன் கோவிலுக்குச் செல்லும் வழியில் இவ்வாறு பரிதாப மரணத்தைத் தழுவிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## கண்ணிவெடியில் சிக்கி 15 பொலிஸார் பலி

(குரொஸ்னி)

செச்சினியாவின் தலைநகர் குரொஸ்னியில் பொலிஸாரை ஏற்றிச்சென்ற பேருந்து கண்ணிவெடியில் சிக்கியதில் பதினைந்து பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் நாடாளுமன்றத்தில் உரையாற்றவிருந்த சமயத்திலேயே இக் கண்ணி வெடிச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

செச்சினியத் தீவிரவாதிகள் பொலிஸாரையும் ரஷ்யப் படையினரையும் குறிவைத்து தாக்குதல்கள்நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## மலேசிய சிறையிலுள்ள இந்தியத்தமிழர்களை உடன் விடுவிக்குமாறு கோரிக்கை

(புதுடில்லி)

மலேசியச் சிறைச்சாலைகளில் உள்ள நூற்றுக்கணக்கான இந்தியத் தமிழர்களை உடனடியாக விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் தேசியமனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தமிழக மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இக்கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து மலேசியாவிற்கு வேலை தேடிச்சென்றவர்களே இவ்வாறு சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைகளில் உள்ளவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் வேலை நீக்கம்

(கென்யா)

கென்யாவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகளை அந்நாட்டரசாங்கம்வேலைநீக்கம் செய்துள்ளது.

இவர்கள் தமக்கு சம்பள உயர்வு வழங்கக் கோரியே கடந்த இரண்டு வாரங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவந்தனர்.

இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனால் சர்வ்தேச விமான சேவை கடுமையாகப் பாதிக்க பட்டிருந்தது. இதனாலேயே அரசாங்கம் உடனடியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை தேவை நீக்கம் செய்துள்ளது. (செ)

# நீங்கள் இடம் பெயர்ந்தவரா?



## நாங்கள் உதவியளிப்போம்



நாட்டின் பிணக்குநிலை காரணமாக நீங்கள் வீட்டை விட்டு வெளியேறியிருந்தால், புனர்வாழ்வு, மீள்குடியமர்வு மற்றும் அகதிகள் தொடர்பான அமைச்சு*(MRRR)*, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் *(UNHCR)*, மற்றும் சர்வதேச அமைப்புக்களின் ஆதரவுடன் உங்களை மீளக்குடியமர்த்துவதற்கு அல்லது வேறு இடத்தில் குடியமர்த்துவதற்கு உதவிபுரிய விரும்புகிறது

சுய விருப்பத்தின் பேரில், பாதுகாப்புடனும் கௌரவத்துடனும்.



இடம்பெயர்ந்தவர்களைப் பதிவு செய்ய *MRRR, UNHCR* என்பன ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் உங்கள் பங்களிப்பு எங்களுக்குத் தேவை. உங்கள் பிரச்சினைகளையும் திட்டங்களையும் எங்களுக்கு தெரிவியுங்கள். அவ்வாறு செய்யும்படி மற்றவர்களையும் ஊக்குவியுங்கள்

இலங்கைப் பிரஜைகள் அனைவருக்கும் உள்ள அதே உரிமைகள் உள் நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உண்டு. அந்த உரிமைகளை முன்வந்து பெற்றுக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பம் ஆகும்.



பதிவு செய்யப்பட வேண்டியோர் யார்? ஆயுத மோதல்கள், பொதுவான வன்முறை நிலைமை அல்லது மனித உரிமை மீறல்கள் காரணமாக வீட்டை விட்டு வெளியேறும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி, தற்சமயம் இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதியில் வசிப்பவர்களே பதிவு செய்யப்பட வேண்டியவர்கள். 2000 டிசெம்பர் 31இற்குப் பின்னர் அரசாங்க உதவியுடன தமது வீடுகளுக்கு திரும்பிச் சென்ற முன்னாள் இடம்பெயர்ந்தோரும் பதிவு செய்துகொள்ளும் தகுதி உடையவர்களாவர்.



உங்கள் பிரதேசத்தில், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பதிவு நாடு பூராகவும் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகிறது. மேலதிக விவரங்களுக்கு உங்கள் கிராம சேவகரிடம் அல்லது *UNHCR*இல விசாரியுங்கள் அல்லது 01- 382065 என்ற இலக்கத்தில் *MRRR* உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

MRRR

UNHCR
The UN Refugee Agency

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இணைய புளொட் உத்தேசம்?

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கழகம் (புளொட்) தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்து கொள்வதற்கு உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் தமிழர் விடுதலைக் கழக இயக்கத்திற்கும் இடையில் இது தொடர்பாக உத்தியோகபூர்வமான பேச்சு வார்த்தையொன்றும் நடைபெற்றுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

கடந்தவருடம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது புளொட் இயக்கம்கூட்டமைப்புடன் இணைந்து கொள்ளவில்லை என்பதுடன் சுயேட்சையாக போட்டியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தமிழ்அரசியல் கட்சிகளிடமிருந்து அரசாங்கம் ஆயுதக்களைவுகளை மேற்கொண்டதையடுத்து நிராயுதபாணியாக்கப்பட்ட நிலையிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்திருப்பதாக அரசியலாளர்கள்கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-8)

# ஆபாசப் படங்கள் காண்பிக்கப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இன்று சனிக்கிழமை கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு உட்பட பல இடங்களில் ஆபாசப் படங்கள் காண்பிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியே இவ்வார்ப்பாட்ட பேரணி நடத்தப்படவுள்ளது.

'புதிய அலை கலை' என்ற ஒரு அமைப்பே இப்பேரணியை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. (செ)

# சமாதானத்தை குழப்பும் முயற்சிக்கு பலம் சேர்க்கிறது ஜே. வி. பி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானத் திட்டங்களிற்கு எதிராகவுள்ள சகல அமைப்புக்களையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் மக்கள் விடுதலை முன்னணி ஈடுபட்டு வருகிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச, இது தொடர்பாக அரசியல் கட்சிகளுடனும் ஏனைய அமைப்புக்களுடனும் பேச்சுக்களை நடத்திவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய அரசாங்கத்தால் இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்டு வந்த தீர்வுகளையும் திட்டங்களையும் தனித்து எதிர்த்து நின்ற மக்கள் விடுதலை முன்னணி, தனது இயலாமையை கருத்தில் கொண்டு தற்போது கூட்டு முயற்சியில் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

# சைவாலயக் கிரியைகள் மாநாடு வரும் சனிக்கிழமை

(யாழ்ப்பாணம்)

இந்துசமயப் பேரவையால் இம்மாதம் 20 ஆம் திகதிநல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தப்படவிருந்த சைவாலயக் கிரியைகள் நடைமுறைகள். சம்பந்தமான கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சைவாலயங்களில் எழும் பல்வேறுபட்டபிரச்சினைகள் ஆராயப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள் பற்றிய தீர்மானங்கள் அன்றையதினம் வெளியிடப்படவுள்ளதால் சிவாச்சாரியார்களும், ஆலய தர்மகர்த்தாக்களும், பரிபாலன சபையினரும், சைவ அபிமானிகளும், சைவநிறுவனங்களின் பிரதிநிதிகளும் தவறாது பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சைவாலயக் கிரியைகள் நடைமுறைகள் சம்பந்தமான சந்தேகங்களைத் தெளிய விரும்புவோர் கருத்தரங்கு ஆரம்பமாவதற்கு முன்னர் அவற்றை எழுத்துமூலம் தந்துதவுமாறும்,

இந்துக்குருமார் ஒன்றிய அங்கத்தவர்களையும் இந்து சமயப் பேரவை அங்கத்தவர்களையும் சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை உறுப்பினர்களையும் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு சமுகந்தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

## பங்களாதேஷில் இருந்து

# 5 இலட்சம் உல்லாசப் பயணிகளை இலங்கை வரவழைக்க முயற்சி

(கொழும்பு)

பங்களாதேஷிலிருந்து 5 லட்சம் உல்லாசப்பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கான முயற்சிகளை இலங்கை வெளிவிவகார அமைச்சர் டி.ரோன்பொனாண்டோமேற்கொண்டுள்ளார்.

பங்காளதேஷிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளவெளியுறவு அமைச்சர், பங்காளதேஷ் பிரதமர்பேகம்காலிதா ஷியாவுடன் இதுதொடர்பாக அண்மையில் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

அமைச்சரின் வேண்டுகோளுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்த பிரதமர் கொழும்புக்கும் டாக்காவுக்கு மிடையில் நேரடி விமான சேவையின் அவசியம்பற்றியும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கியநாடுகளின்சமாதானப்படையில்அங்கத்துவம்வகிக்கும் இலங்கை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய பங்களாதேஷின் உதவி தேவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-9)

# 8 மாவட்டங்களில் கண்காணிப்புக் குழு அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகங்கள் இதுவரை எட்டு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் தலைமையகம் கொழும்பு லங்கா ஒப்ரோய் ஹோட்டலில் அமைந்துள்ளது.

மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சிங்கள வியாபாரிகளிடம் மண் கூஜாக்களை வாங்க மக்கள் மிகுந்த ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளத்திற்கு அருகில் அமைந்திருக்கும் நாகவிகாரைக்கு முன்பாக நேற்று மண் கூஜாக்களை விற்பனை செய்வதில் சிங்களவியாபாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

இந்த அழகிய மண் கூஜாக்களை சினேகபூர்வ கலந்துரையாடல்கள் மூலம் மக்கள்ஆர்வமுடன் பார்வையிட்டு வாங்கிச் சென்றதையும், அவதானிக்க முடிந்தது. (உ-6)

# 20 வருடங்களின்பின் பக்திபூர்வமாய் நடந்த தெப்பத் திருவிழா

(திருகோணமலை)

வரலாற்றுப் புகழ்பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலய தெப்போற்சவ விழா கடந்த 20 வருடங்களின் பின் செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் கோணஸ்வரப் பெருமான் மாதுமை அம்பாள் சமேதராக ஆலயத்தைச் சூழவுள்ள இரண்டுமைல்கடல் பிரதேசத்தில் உலாவந்தார்.

முன்பு வழமையாக இடம்பெற்றுவந்த தெப்பத்திருவிழா யுத்தநிலை காரணமாக 20 வருடங்களாக நடைபெறாதிருந்தது. கடந்த புதன்கிழமைஇடம்பெற்ற தெப்பத் திருவிழாவில் தமிழர், சிங்களவர் பாதுகாப்புப்படையினர் எல்லோரும் பக்திபூர்வமாகக் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

# வருடாந்த உற்சவம்

(ஏழாலை)

ஏழாலை பெரியதம்பிரான் கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை இரவு அபிஷேகம், பொங்கல், தீக்குளிப்பு என்பவற்றுடன் இடம்பெறவுள்ளது. (எ-206)

# அனுமதி அட்டையை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

எழுதுநர், தட்டெழுத்தாளர் தரம்'அ' பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ். கல்வி வலயத்தில் உள்ளதால் சம்பந்தப்பட்டவர்களைவந்து பெற்றுக் கொள்ளுமாறுயாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-3)

# வரவேற்பு விழா

(கந்தர்மடம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதலாம் வருட மாணவர்களுக்கானவரவேற்பு உபசார விழா இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ-37)

## ஆசிய வங்கியின் உயர்மட்ட தூதுக்குழு நேற்று வன்னி சென்றது

(கொழும்பு)

ஆசிய வங்கியின்உயர்மட்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்துக்கு சென்றுள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை வரை வன்னியில் தங்கியிருக்கும் இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள்மற்றும்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவசியமாக செய்யப்பட வேண்டிய வேலைகளை இனங்காணவுள்ளனர்.

இதேவேளை வீதிகள் மற்றும் புனரமைப்பு வேலைகள் நீர்ப்பாசன வேலைத்திட்டங்களிற்கு முன்னுரிமைவழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு எதிர்வரும் 23 ஆம் திகதி இவர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9,8)

# சங்கே முழங்கு

## சரியான திசையில் நடந்து உரிய இடம் அடைவோம்

வரலாற்றின் முக்கியமானதொரு காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம். இது யாராலும் மறுக்க முடியாத உண்மை. எம்வாழ்வில் நாம் கண்ட வேதனையான சம்பவங்கள் பல இன்று பழங்கதைகள் ஆகிவிட்டன. எமது மனம் புதிய உணர்வுகளால் பொங்குகிறது. அது செயல்வடிவமாக, சொல்வடிவமாக வெளியே தெரிந்துதான் ஆகவேண்டும். ஆனால் நாம் காணும் காட்சிகளில் சில நம்பிக்கை தருவனவாக இல்லை, இந்த உணர்வுகளை மதிப்பான முறைகளில் மட்டும் வெளிப்படுத்தி உயர்வு பெற சிந்திக்க வேண்டும்.

பொது இடங்களிலே சினிமாப்பாடல்களின் ஒலி இன்னும் அடங்கவில்லை, கீழ்த்தரமான ரசனைகளைக் கொண்டபார்வைகளும் கிண்டல் ஒலிகளும் இன்னும் கேட்கவே செய்கின்றன. ஆலயங்கள் பக்திமயமாகவில்லை. அங்கு மானிடங்களை மிதிக்கும் செயல்கள் தொடர்கின்றன. பெரியவர்கள், தாய்மார்கள், குருமார்களைக் கௌரவிக்கும் தன்மை இன்னும் சில இடங்களில் அரும்பக்கூட இல்லை. முக்கியமாக உடை அணிவதில் தமிழ் கலாசாரத்தை இன்று தேடிப்பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றையா தியாகிகள் வேண்டி நின்றார்கள். இவற்றையா நாடி அவர்கள் தியாகம் செய்தார்கள்? வீதியெங்கும் தோரணம்-ஆனால் மக்கள் உணர்வுகள் சரியான திசையில் இன்னும் பொங்க ஆரம்பிக்கவில்லை. தெருவெங்கும் ஒலிபெருக்கி முழக்கம்-ஆனால் மக்கள் இன்னும் திருந்த ஆரம்பிக்கவேயில்லை.

சரியான திசையில் நடக்காமல் நாம் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச்சேர முடியாது, மன உணர்வுகளை மதிப்பான முறையிலும் வெளிப்படுத்துவோம்.

சி. ஜெயகணேஷன்

தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு
- குறள்

வலம்புரி

## அவதானம் வேண்டும்

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து யாழ்ப்பாணத்தில் மூவின மக்களும் நடமாடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த இருபது வருடகாலப் போராட்ட வரலாற்றில் தற்போதைய நிலைமை, ஏற்கனவே இருந்த ஓர் பழைய நிலைமை எனினும், அன்றைய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் இடையே பாரிய வேறுபாடு உண்டு. அன்று தமிழினம் அடிமைப்பட்ட இனமாக - அடக்கப்பட்ட இனமாக வாழ்ந்தது. ஆனால் இன்று தமிழன் சம உரிமைக்கு உரியவனாக - அடிமை விலங்கு உடைக்கும் தீரம் உடையவனாக நின்றுகொண்டு உரிமை பேசுகின்ற உயரிய நிலை காணப்படுகின்றது.

இத்தகைய ஓர் சூழ்நிலையில் போராட்ட உணர்வுகளையும், விடுதலைப் போராட்டத்தின் நினைவுகளையும் மழுங்கடிக்கும் நடவடிக்கைகளிலும் சிலர் ஈடுபடக்கூடிய வாய்ப்புண்டு. குறிப்பாக சிலகலாசார நிகழ்வுகளை ஏற்படுத்தி அதன் மூலம் யாழ்ப்பாணத்து மக்களை திசைதிருப்பக்கூடிய சாத்தியக்கூறுகளும் உண்டு. இது விடயத்தில் தமிழ் மக்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமென்பது நிரந்தர சமாதானத் தீர்வைப் பெற்றுத் தந்துவிட்டது என்பது பொருளல்ல, அவ்வகையில் நாம் ஓர் ஓய்வுநிலையில் உறங்கு நிலையில் இருக்கிறோம். அத்தகைய காலங்களில் கேளிக்கை நிகழ்ச்சிகளையும், கலாசார நிகழ்வுகளையும் ஒத்திவைத்து நிதானமாகச் செயற்படுவது ஒவ்வொரு தமிழ் மகனினதும் தலையாய கடமையாகும்.

தியாகங்கள் நிறைந்த மண்ணில், பொது மக்களின் உயிரிழப்பு மலிந்த மண்ணில் நாம் வாழ்கின்றோம். இந்த உணர்வை - உண்மையை நாம் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. இதிலிருந்து விலத்துவதற்காக - விடுவிப்பதற்காக, கலாசார நிகழ்வுகளும் தமிழ் மக்களின்பொருளாதாரத்தை தென்னிலங்கைக்கு நகர்த்தும் நிகழ்வுகளும் நடைபெறும்போது உரியவர்கள் உரியமுறையில் ஆராய்ந்து தெளிவிப்பது மிகமிக அவசியமாகும்.

### திறனாய்வுக்களம்

# இளங்கலைஞன் தர்ஷனனின் கண்டப்பிரஸ்தாரம்

## கலாரசிகர்களின் பெரும் பாராட்டுப்பெற்றது

நல்லூர் இளங்கலைஞர் மன்ற இசைவிழாவில் அறிவிப்பாளரின் குரல் இனிமையாகவும், மதுரமாகவும் ஒலிக்கும் போது, யாழ். பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளரான ஸ்ரீ. தர்ஷனனின் கச்சேரி இப்போது ஆரம்பமாகிறது. அனுசரணையாக வயலின் ஏ. ஜெயராமன் மிருதங்கம் எஸ். மகேந்திரன் கீபோர்ட் எஸ். ரஜீவன் என அறிவிப்பாளர் அறிவித்து முடிக்கும் போது அரங்கை மறைத்திருந்த நீலத்திரை மெல்ல விலகுகிறது. சந்தனத்திலகமுடன் விபூதி அணிந்த, கலைத்தேசு நிறைந்த கலைஞன் தர்ஷனனின் முகத்திலே சாந்தம் குடிகொண்டிருந்தது.

#### கண்டப்பிரஸ்தாரம்

மதுரமான கம்பீரக் குரலில் தர்ஷனனின் இக் கச்சேரியில் தான் சாதிக்கப் போகும் சாதனையின் அற்புதமான விளக்கத்தைத் தூயதமிழில் யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் 'நான் இன்றைய கச்சேரியில் ஒரு பழைமையில் புதுமை நிறைந்த கச்சேரியம் சமான கண்டப் பிரஸ்தாரம் என்னும் தாள, லய மனோதர்ம நுணுக்கம் நிறைந்தஒரு பல்லவியை எடுத்துப் பாடவிருக்கிறேன். இந்தப் பல்லவியின் கலை நுணுக்கங்களையும், அம்சங்களையும் ஸங்கீத ஸம்பிரதாயக் கச்சேரிகளில் மிகப் பழம் பெரும் வித்வான்கள் கையாண்ட மிகவும் கடினமானதான நுணுக்கங்களைக் கொண்டபல்லவியைக் கலாரசிகர்கள்முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன்' எனக் கூறினார்.

அவ்வேளை கலாரசிகர்களின் முகங்களில் அற்புத ரசம் பிரதிபலித்தது. மேலும் கண்டப் பிரஸ்தாரம் செய்யும் முறைகளையும், கிரக்பேதம்செய்யும்முறைகளையும் ரசிகப் பெருமக்களுக்குவிளக்கியவிதம்தர்ஷனன்ஒருசிறந்த இசை விரிவுரையாளன் என்பதை நிரூபித்தது. ஆபோகி ராக வர்ணத்துடன் தொடங்கியகச்சேரிஆரம்பத்திலேயே களைகட்டியது. பக்கவாத்தியங்கள் கச்சேரியை மெருகூட்டினவர்ணம் பாடும்போதுவித்வான்கள் கீழ்க்காலம் மேற்காலம் பாடிநிறைவு செய்வது வழக்கம். இச்சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டு சற்று வித்தியாசமாக மேற்காலம், திஸ்ரம் என்ற ரீதியில் ஸ்வரபாவஸாஹிதயபாவங்களுடன்ஜனரஞ்சகமாகவும் சம்பிரதாய பூர்வமாகவும் பாடி ரசிகர்களின் பெரும் பாராட்டைப் பெற்றுக்கொண்டார் இளங்கலைஞன் தர்ஷனன்.

### மஹாவித்துவான்

#### சாருகேஸி ஆலாபனை

அடுத்து சாருகேஸ் ராக ஆலாபனை மிகவும் விஸ்தாரமாகவும், கமக ஸரிகரகதியுடன் அற்புதமாகவும் இருந்தது ராக சஞ்சாரத்தில்மந்திரஸ்தாயி மத்திமத்தை ஸ்வரசுத்தமாகவும் தெளிவாகவும் மதுரமாகப் பாடிக் கர்நாடக ஸங்கீத ரசிகர்களின் கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார். அன்றியும் ஆலாபனையில்பருக்கா, தசவிதகமகங்கள் ஜாரு, ரக்தி என்பவற்றுடன் தாரஸ்தாயி பஞ்சமம்வரை பாடி தார ஸ்தாயிபஞ்சமத்தில் ஸ்ருதி சுத்தமாகநின்று அதன் பின்ராக விவகார ஆலாபனையும், விளம்ப, மத்திம, துரிதப்பிரயோகங்களும்கலாரசிகர்களின் அமோகமான பாராட்டுக்களைக் கரகோஷ மூலம் பெற்றுக் கொண்டன.

#### பல்லவியின் காந்தம்

அதன் பின் தினப்பாடிபல்லவியைப்பாடும்போதுபல்லவியின்ஸாஹித்தியம்காந்த சக்தி இழுத்ததுபோல் ரசிகர்களைக் கண்ணனுடைய கழலடியிலே பக்தியோடு சரணடையச் செய்து விட்டது.

பஞ்சகதிக்கல்யாணிகளான குதிரைகள் முறையே திஸ்ர, கண்ட' மிஷ்ர, சங்கீர்ண, சதுஸ்ரகதிகளில் விவகாரங்கள் கற்பனாஸ்வரங்களாகக் கீழ்க்காலம், மத்திம காலம், மேற்காலங்களில் பிரவாகித்தனஎடுத்துக்கொண்ட ஸ்வரங்களையும், கண்டபிரஸ்திரம் செய்யும் போது மிகக் சரளமாக மனோதர்மம் நிறைந்த கற்பனாஸ்வரங்கள் மடைதிறந்த வெள்ளம் போலப் பிரவாகித்துப் பெருகின. பல்லவியில் கண்டப் பிரஸ்திரம் செய்து பாடும் முறையாழ்ப்பாணக்கலாரசிகளுக்கு, குறிப்பாகப் பழைமையை விரும்பும் இசைப்பிரியர்களுக்கு ஒருவரப்பிரசாதமாகும். இம்முறை, மிகுந்த லயவேலைப்பாடுகளுடன் பஞ்சகதிகளில்வரும் ஸ்வரப்பிரஸ்தார கற்பனா, மனோதர்மப் பிரவாகமும்கொண்டிருப்பதில் பல வித்வான்கள் இதைக்கச்சேரிகளில் கையாள்வதில்லை. கத்திமுனையில் நடப்பதுபோலத்தாளக் கட்டுப்பாட்டுக்குள் மனோதர்மக் கற்பனாஸ்வரங்களைப் பிரயோகித்துக் கண்டகதியில் பாடிய அந்த மனோதர்மஸங்கீதத்தை ஈழத்திலே, முக்கியமாக யாழ்ப்பாணத்திலே இசைமேதையான தர்ஷனன் புரிந்த ஒருபெரும் சாதனையாகவே நான் கருதினேன். இத்தகைய பல்லவி, நிரவல், கற்பனாஸ்வரங்கள் நிறைந்த மனோர்தர்மக் கண்டப் பிரஸ்தாரம விடயமறிந்த கர்நாடக ஸங்கீதகலாரசிகர்களுக்கு அற்புதமான, வியக்கத்தக்க ஒருபெரும் இசைவிருந்தாகக்கணிக்கப்பெற்றதை நான் கலாரசிகப் பெருமக்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

#### தரமான சிகரசாதனை

தென்னிந்தியாவிலேஸங்கீத சிம்மங்களான பல வித்வாகள் கண்டப் பிரஸ்தாரம் செய்யும் முறையைக் கைக்கொள்தற்காக மேற்கொள்ளும் பிரயத்தனங்கள் மிகக் கடினமானதால், அம்முறையைக் கச்சேரிகளில் ஒதுக்கியே வந்திருக்கிறார்கள். கர்நாடக ஸங்கீதம் தோன்றிய பாரதத்திலேயே பெரிய பெரிய வித்வான்களும் பாட அஞ்சும்கண்டப் பிரஸ்தாரத்தை மிகவும் இளங்கலைஞனான தர்ஷனன் இம்மியளவேனும் லயம் தவறாமல், ராகபாவமும் ஸாஹித்ய பாவமும் இணையும் படிபாடிச் சாதித்தஅந்தச் சாதனை இளங்கலைஞர் மன்றம் நடாத்திய இசை விழாவின் ஒருதரமான, சிகரமான சாதனையே என மார்தட்டி எக்காளத் தொனியுடன் நாம் எவருக்கும் அஞ்சாமல் கூறலாம். இச்சாதனை யாழ்ப்பாணக் கலாரசிகர்களின் உள்ளத்தில் பொன்னெழுத்துக்களால் போற்றிவைக்கப் படவேண்டியதுதர்ஷனன்இதைப் பாடும்போது, ஸாஹித்தியத்தையும் ஸாஹித்யபாவத்தையும், ராகத்தையும் அபாரமான கற்பனாஸ்வரங்களையும் பஞ்சகதிக்கேற்றவாறு பாடி, இறுதியில் மகுடம் வைக்கும் போது அவர்கையாண்டஸ்வரப் பிரஸ்தாரம் சிகரமாகக் காட்சியளித்தது. இந்த மகுடத்துக்கு மகுடம் வைத்தது போல மிருதங்கவித்வான் மகேந்திரனின் கரங்களில் தவழ்ந்தநாதமும் வயலின் வாத்தியத்தில் ஜெயராமனின் கைவண்ணமும் இளங்கலைஞர் மன்ற அரங்கைச் சரஸ்வதி வாழும் சத்தியலோகமாக்கி விட்டன.

இந்த இசையுலக சாதனையை ஈழத்தில் புரிந்த இளங்கலைஞனும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய தர்ஷனனை வாழ்த்திப்பாராட்டுவோமாக.

## தினசரி தியானம்

### ஆகர்ஷ்ண சக்தி

என் உள்ளங்கவர் கள்வன்

- திருஞானசம்பந்தர்

அண்டமெங்கும் ஆகர்ஷ்ண சக்தியாய் ஆவிர்பவித்த பண்டைப் பொருளே, என்னை நீ ஆகர்ஷித்துக் கொள்வாயாக.

ஒவ்வொரு பொருளும் தனக்குச் சொந்தமானதை ஆகர்ஷிக்கிறது. தனக்குச் சொந்தமான கோளங்களைச் சூரியன் தன்பால் இழுத்து வைக்கிறது. பூதங்கள் பூதங்களைப் பற்றி இழுக்கின்றன. தாய்க்கும் சேய்க்குமிடையே அதே சக்தி பந்தமாக வடிவெடுக்கிறது. ஆயிரம் ஆடுகளையும் குட்டிகளையும் பிரித்துப் பிறகு ஒன்று சேர்த்தால் ஒவ்வொன்றும் தனக்குச் சொந்தமானதைத் தேடித் தெரிந்து கொள்கிறது. நமக்குச் சொந்தமான பொருளிடத்து நாம் விரைவில் சேர வேண்டும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## ஏழாண்டுகளின் பின்னர் நெல்லியடியில் ஒங்கிஒலித்த புரட்சிக் கானங்கள்

(மந்திகை)

'சமாதானத்துக்கானஇசைப் பயணம்'என்ற தலைப்பிலான இசை நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய திறந்த வெளியரங்கில் இடம் பெற்றது.

7ஆண்டுகளின் பின்னர் தமிழீழ இசைக் குழுவினரின்இந்த நிகழ்ச்சியை பெருமளவு மக்கள் எழுச்சியுடன் கண்டுகளித்தனர்.

தமிழீழத்தின் தலை சிறந்த பாடகர்களான சாந்தன், திருமலைச்சந்திரன், குட்டிக் கண்ணன், வசீகரன், நிரோஜன், ரிசி ஆகியோர் புரட்சிக் கீதங்களை இசைத்தனர்.

இந் நிகழ்வில், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்புதுவைஇரத்தினதுரை ஆகியோர் உரை நிகழ்த்தினர். (உ-23,247)

## முஸ்லிம்களை மீளக் குடியமர்த்துவது பற்றி அரச அதிபர்களுடன் பேச்சு

(கொழும்பு)

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக விரைவில்மன்னார், வவுனியா முல்லைத்தீவு அரசாங்க அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர்தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று இடம் பெற்ற இரு தரப்பினருக்கும் இடையிலானபேச்சுவார்த்தை தொடர்பாககருத்து தெரிவிக்கையில் மேற்படிதெரிவித்துள்ளார்.

இருதரப்பினருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தம், இனப்பிரச்சினை தீர்வில் புதியதொரு திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் ஏகப் பிரதிநிதி முஸ்லிம் காங்கிரஸ் என்பதைஇவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தஉடன்படிக்கை எடுத்துக் காட்டியுள்ளதுடன்,

தமிழ் -முஸ்லிம் சகோதர சமூகங்களிடையான புரிந்துணர்வை மீண்டும் கட்டியெழுப்ப உதவும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். (உ-3)





## இன்று நடைபெறும் கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடகர்கள், இசைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு பொற்பதி வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ் மாவட்ட அரசியற்த் துறை பணிமனையில் நடைபெறுமென யாழ் மாவட்ட அரசியல்த்துறை அறிவித்துள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட விருப்பதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-9)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள மினி சினிமா உரிமையாளர்கள், திரை அரங்குகளின் உரிமையாளர்கள், ஒளிப்பட விநியோகஸ்தர்கள், ஒளிப்படப் பிடிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பொற்பதி வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ் மாவட்ட அரசியற்துறை பணிமனையில் இடம்பெறுமென யாழ் மாவட்ட அரசியற்துறை அறிவித்துள்ளது.

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை இன்று காலை 9 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் கூடுமாறு, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் அரசியல் பிரிவினருடன் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற இருப்பதால் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

## ஆட்சிக் குழுக் கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சிக்குழுக் கூட்டம் எதிர் வரும் 24ம், 25ம் திகதிகளில் மல்லாவியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு செல்வதற்கான ஆலோசனைக் கூட்டம், நாளை முற்பகல் 11 மணிக்கு, சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் தாய்ச்சங்க உறுப்பினர்கள் மாவட்ட நிர்வாகிகள், கிளைச் செயலாளர்களை கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார்.(இ)



நேற்று நெடுந்தீவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் பாடசாலை மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# மாகாண சபைக்கு பதிலாக மாவட்ட சபை

## அரசு ஆராய்வு

(நமது நிருபர்)

தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபை ஆட்சி முறைக்குப் பதிலாக அதிகளவு அதிகாரங்களுடன் கூடிய மாவட்டசபை ஆட்சி முறையை அமுல்படுத்துவதற்கு அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் அலீக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் அலீக் அலுவிகார மேலும் தெரிவித்திருப்பதாவது:- இந்நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் அமைக்கப்பட்ட மாகாண சபைகள் ஆட்சிமுறை வடக்குக் கிழக்கில் கடந்த பல வருடங்களாக இயங்கவில்லை ஏனைய மாகாணங்களில் உள்ள மாகாண சபைகளுக்கும் அந்தந்த மாகாணங்களில் பொரும் சுமையாக இருந்து வருகின்றனவே ஒளிய எந்த விதமான நன்மைகளையும் அந்த மாகாணங்களுக்குச் செய்யவில்லை

மாகாண மட்டத்தில் எடுக்கப்பட்டு வரும் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மாவட்ட ரீதியில் எடுப்பதற்கு வசதியாக மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டு, அவற்றுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் தற்போது அமுலில் உள்ள மாகாண சபைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மாவட்ட சபைகள் மூலமும் பிரதேச சபைகள் மூலம் அமுல்ப்படுத்தப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## வாய்மொழிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ உதவியாளர்களின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய இம் மாதம் 24ம் திகதி வாய்மொழிப் பரீட்சை நடாத்தத் தீர்மானித்துள்ளதாக வடக்கு கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுசெயலாளர் அறிவித்து ள்ளதால் தகுதியானவர்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கும் வண்ணம் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (உ)


**புலமைப் பரிசு - 2002**
**33வது பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்**

| | | |
|---|---|---|
| 1. | வ.தனுஜன் (யா/இ.ஆ.பா) | 154 |
| 2. | நி.வாகினி | 142 |
| 3. | தி.வைகுந்தன் | 141 |
| 4. | ஆ.அலெக்ஸ் உமாசங்கர் (யா/இ.ஆ.பா) | 138 |
| 5. | மோ.ஜனகன் (மானிப்பாய் விவேகானந்தா வித்) | 137 |
| 6. | ஆ.யதுவரன் | 131 |
| 7. | வ.விகர்ணன் | 130 |
| 8. | தே.ஜானகி | 129 |
| 9. | ர.டாரிகா (சுண்டுக்குளி ம/க) | 127 |
| 10. | S.சிவராம் (சென் ஜோன்ஸ் கல்) | 123 |

[C/3990]

**BOND - யாழ் நகர்**


## தீவக மக்கள்...

செபமாலை புஸ்பராணி ஏற்றி வைத்தார். தொடர்ந்து அங்கிருந்து எழுச்சி ஊர்வலம் புறப்பட்டு பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு மைதானமான அன்ரனீஸ் நிலாஜோதி முத்தமிழ் அரங்கை வந்தடைந்தது.

மதகுருமார்கள், பொது நிறுவன பிரதிநிதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என தீவகத்தில் திரண்டிருந்த சனத்திரளின் மத்தியில் பொங்குதமிழ் எழுச்சிக் கூட்டம் ஆரம்பமாகியது.

மாவீரர்களின் பெற்றோர்களால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றதை அடுத்து, மக்கள் அனைவரும் எழுந்து உறுதி எடுக்கும் வகையில் கைகளை முன்னுக்கு நீட்டியவாறு நிமிர்ந்து நிற்க பொங்கு தமிழ்ப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அலைகடலும் ஆர்ப்பரிக்க தீவக மக்களும் தமிழீழக் கோசத்தை உணர்வு பூர்வமாக ஏகோபித்த குரலில் வான்அதிர முழங்கினர். "தன்மானத் தமிழனின் உரிமை பொங்கு தமிழ்", "தமிழ் எங்கள் உயிர், அந்த உயிர் பிரபாகரன்" "எமது மூச்சு தமிழனின் பேச்சு", "எங்கும் பொங்கும் தமிழ் எம்தீவில் உறங்கிட வேண்டுமா" என்ற கோசங்கள் கடலலையையும் ஒரு கணம் நிறுத்தி ஓங்கி ஒலித்தது.

இதே வேளை நெடுந்தீவில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ள ஏனைய தீவகப் பகுதிகளைச் சேர்ந்த மக்களும், யாழ் மக்களும் நெடுந்தீவுக்குப் படையெடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-82)

## கொழும்பு...

வண்டிகள் திருப்பி அனுப்பப்பட்டன.

இதேவேளை கொழும்பிற்கு பஸ்சில் சென்ற பயணிகளை முகமாலையில் தமிழீழ போக்கு வரத்துக்கழக பஸ்சில் ஏற்றி புலிகள் அவர்களின் பயணத்திற்கு உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)


**மில்க்வைற்**
கேட்டு வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
மில்க்வைற் சோப்
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541


## அன்னை பூபதியின்...

கூட்டத்தில் அஞ்சலி உரைகள் இடம் பெற்றன.

நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்ப் பிரிவுப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர், பெண் போராளி தமிழினி, யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன், யாழ் மாவட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், மனித நேய அமைப்புக்களின் ஒன்றிய செயலாளர் சிவசுப்பிரமணியம், மற்றும் அன்னையர் முன்னணி உறுப்பினர்கள், மத குருமார்கள் எனப் பலர் உரை நிகழ்த்தினர்.

வானம் இருண்டு சிறிய அளவில் மழைத்தூறல் விழுந்து கொண்டிருந்தபோதும் மக்கள் அவ் விடத்தை விட்டு அகலாது உணர்வுபூர்வமாக நிகழ்வில் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது.

அஞ்சலி நிகழ்வின் இறுதியில் ஈழத்தின் புகழ் பூத்த எழுச்சிப் பாடகர்களான எஸ்.ஜீ.சாந்தன், மற்றும் சுகுமார் குழுவினர் நீண்ட காலங்களுக்குப் பின்னர் இணைந்து வழங்கிய தமிழீழ எழுச்சி கானங்கள் இடம்பெற்றன. (இ-10)

## சமாதான முயற்சிக்கு...

செயற்படப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா்குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

தற்போதைய சமாதான முயற்சிகளை வெற்றியடையச் செய்யும் வகையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கப் போவதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க், எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-5)


**மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து**
**20.04.2002**
**HAPPY BIRTHDAY**



வரணியைச் சேர்ந்த
சிவகுமார்- தேவமலர் தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
**நாகநர்த்தனன்**

இன்று [20.04.2002] சனிக்கிழமை தனது மூன்றாவது பிறந்த நாளை வரணியில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை லண்டனில் இருக்கும் அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, மாமன்மார், சித்திமார், சித்தப்பாமார், ஆகியோர் இறைவன் திருவருளால் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின் றனர்.

வரணி. K. றஞ்சன் (சித்தப்பா)



**ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்**

கல்லூரி மாணவர்களுக்கான பரிசில் திட்டத்தின் கீழ் 2001ம் ஆண்டின் பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் :-

**கனடாக் கிளையினுடையவை :**

i) *S.T சாமுவேல் நினைவுப் பரிசில்கள்:- தலா ரூ 5000/=*
ரவீந்திரன் கஜந்தன் (உயிரியல்)
சண்முகநாதன் செல்வரதன் (கலை)

*R.M குணரத்தினம் பரிசில்கள்:-*
இராமலிங்கம் ரவிதரன் (கணிதம்)
இராசேந்திரம் வைகுந்தவாசன் (வர்த்தகம்)

ii) *ப .ஏகாம்பரம் நினைவுப்பரிசில்கள்:- தலா ரூ 3000/=*
விளையாட்டுத்துறை
கிரிக்கெட்:- S. கிரேட்சன்
உதைப்பந்து:- V .முகுந்தராசா
தடகளம்:- V .தினேஷ்

iii) *2001ன் சிறந்த உதைப்பந்தாட்ட வீரர்:- கேடயம்*
திரு. ந. சிவபாலன் அன்பளிப்பு
V. முகுந்தராசா

iv) *தாய்ச் சங்கம்:- தங்கப்பதக்கங்கள்*
கிரிக்கெட் R. ரமணன்
S. மகிந்தன்

பரிசுக்குரியவர்கள் இதுவரை பெறாதிருப்பின் கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

- செயற்குழு -

[C/3989]



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
**தமிழன்**
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]



**நாகம்ஸ்-சுன்னாகம்**
இந்தியாவிலும் நாகம்ஸ் சினிமாவிலும் ஒரே தின வெளியீடு
டொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த
**தமிழ்**
தினசரி 11.00, 3.00, 6.00 (பு.நே)



**காணி விற்பனைக்கு**

யாழ் மாநகர சபை எல்லைக்குள் 3ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 21/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :-

விளம்பர இல - 250
மே/பா, வலம்புரி
15, வெள்ளாத் தெரு,
யாழ்ப்பாணம்.

[C/3988]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.